Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 30 வியாழக்கிழமை (13.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 176

## முச்சக்கரவண்டியுடன் ஹயஸ் மோதி விபத்து

### முச்சக்கரவண்டிச் சாரதியான வவுனியா இளைஞன் மரணம்



(குருமன்காடு)

வவுனியாவில் கற்பகபுரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

▷24

## தெரிவுக்குழுவில் ஹிஸ்புல்லாஹ் இன்று சாட்சி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவில் சாட்சி வழங்குவதற்காக

▷24

## பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்ந்து 3 மாதம் தடையின்றி இயங்கும்

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ள

▷24

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கைக்கு அமெரிக்கா எப்போதும் உதவத் தயார்!

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையில் சமத்துவத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த அனைத்து உதவிகளையும் செய்யத் தயார் என அமெரிக்கா உறுதியளித்துள்ளது.**

**அத்துடன் பயங்கரவாதத்தை ஒழிக்க கேட்கும் உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ், அமைச்சர் மனோ கணேசனுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.**

தூதுவர் அலைனா டெப்லிட்ஸுக்கும் அமைச்சர் மனோ கணேசனுக்கும் இடையிலான சந்திப்பொன்று அமைச்சின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

▷23

## கொக்குவில் ரயில் நிலைய பொறுப்பதிகாரி மீது மர்ம கும்பல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ரயில் நிலைய பொறுப்பதிகாரி (ஸ்ரேசன் மாஸ்டர்) மீது இனந்தெரியாத கும்பல் ஒன்று தாக்குதல்

▷24

## தேரர்கள் கோரிக்கைக்கு நல்ல பதிலை வெளியிடுவோம்

### ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

மஹாநாயக்க தேரர்களின் கோரிக்கைகளுக்கு அமைய மீண்டும் பதவிகளை பொறுப்பேற்பது தொடர்பில்

▷24

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கோவையைச் சேர்ந்த ஆறு பேர் கைது

### இந்திய புலனாய்வுத் தகவல்

(கோவை)

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தியவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்தியா, கோவையைச் சேர்ந்த 6 பேருக்கு எதிராக அந்த நாட்டு தேசிய புலனாய்வுப் பிரிவால்

▷23

## அனைவருக்கும் சமமான முறையில் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

(கொழும்பு)

அனைவருக்கும் சமமான முறையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை இலங்கை அரசாங்கம், தொடர்ந்தும் உறுதிப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோரிடம் ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ருமேனியா தூதரகங்கள் மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம்,

▷23

## பயங்கரவாதி சஹ்ரானுக்கும் கோத்தபாயவுக்கும் தொடர்பு

### வாய் திறக்காமலிருக்க 500 மில்லியன் ரூபாய் பேரம் பேசினார்

– தெரிவுக்குழுவில் அசாத் சாலி

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் தேசிய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது. தவ்ஹீத் ஜமாஅத்தின் தவறான செயற்பாடுகள் குறித்து பேசிய காரணத்தினால்தான்

▷24

## தெரிவுக்குழுவை நிறுத்த முடியாது

### சபாநாயகருடனான சந்திப்பில் தீர்மானம்

(கொழும்பு)

ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்ற ஒழுங்கு

▷24

## மாற்றான் பிள்ளை போல் வடக்கை அரசு நடத்துகிறது

### நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(கிளிநொச்சி)

வடக்கு – கிழக்கு பிரதேசங்களை மாற்றான் தாய் பிள்ளைகளைப் போன்றே பதவிக்கு வரும் அரசாங்கங்கள் நடத்தி வருகின்றன என்று

▷23

## அரசுக்கு எதிராக ஜே.வி.பி கொழும்பில் ஆர்ப்பாட்டம்!



▷23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சமஷ்டி கேட்டவர்கள் இப்பொழுது சமுர்த்தி கேட்டுத் திரிகிறார்கள்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

சமஷ்டி கேட்டவர்கள் இப்பொழுது சமுர் த்தி கேட்டு திரிகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரி வித்தார்.

நேற்று கிளிநொச்சி கூட்டுறவாளர் மண் டபத்தில் 3.30 மணியளவில் இடம்பெற்ற் வாராந்தப் பத்திரிகை வெளி யீட்டு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்னும் நான்கு மாதத்தில் இன் னுமொரு ஜனாதிபதி தேர்தலை சந்திக்க இருக்கின் றோம். நாம் ஜனாதிபதி, பிரதமர் எமக்கு அரசியல் தீர்விற்கு உதவுவார்கள் என்று நம்பி இருந்தோம். ஆனால் நான்கு ஆண் டுகளை கடந் துவிட்ட போதும் எதுவும் நடக்கவில்லை. ஜனதிபதி தேர்தல் ஒன்றை எதிர்நோக்க இருக்கின்றோம். அதற்காக மக்கள் வரிப்பணத்தில் நடைமுறைப் படுத் தப்படுகின்ற சமுர்த்தி, கம்பரெலிய போன்ற திட்டங்களை சிலர் காவித் திரிகின்றார்கள் சமஷ்டி கேட்டவர்கள் இபொழுது சமுர்த்தி கேட்டு திரிகின்றார்கள். அதனை விட முன் னைய அரசாங்கத்தோடு இணைந்து இவ் வாறான செயற்திட்டங்களை முன் னெடுத்தவர்களை விமர்சித்தவர்கள் இன்று அதனையே செய்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

இவ் பத்திரிகை வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக சி.சிறீதரன், தவிசா ளர்களான வேழமாலிதன்,சுரேன் , வடமா காண சபை முன்னாள் உறுப்பினர்களான குருகுலராஜா, தவநாதன் எனப் பலரும் கலந்துகொண்டனர்

(ம-3,312)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் இந்து மகளிர் வீதி அருள்மிகு ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் நூதன பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 தொடக்கம் 8.00 மணி வரை இடம் பெறவுள்ளது. (ம-3)

# அடிக்கல் நாட்டு விழா

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் கைதடி கிழக்கு இராஜபுரி மாதிரிக் கிராமத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணி க்கு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலை யத் தலைவர் சி.கஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரா ளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய வீட மைப்பு அதிகார சபையின் மாவட்ட முகா மையாளர் ரவீந்திரன், தென்மராட்சிப் பிரதேச செயலர் தேவந்தினி பாபு மற்றும் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்

(ம-3,30)

# தாச்சிப் போட்டி இன்று

(சாவகச்சேரி)

கைதடி வளர்மதி சனசமூக நிலையத் தின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா வையொட்டி வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி ரீதியிலான மாபெரும் தாச்சி இறுதிப்போட்டி இன்று வியா ழக் கிழமை இரவு 7மணிக்கு வளர்மதி விளை யாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற வுள்ளது.

வளர்மதி விளையாட்டுக் கழகத் தலை வர் மோகன்தாஸ் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார்.

தாச்சி இறுதிப்போட்டியில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது

(ம-3,30)

# தெரிவுக்குழு தொடர்பான தகவல் சேகரிக்க

## ஊடகங்களுக்கு தடை விதிக்க நடவடிக்கை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் விசா ரணையின் போது தேசிய பாதுகாப்பு தொடர் பான விடயங்கள் குறித்த தகவல்களை சேகரிக்க ஊடகங்களை அனுமதிப்ப தில்லை என இணக்கப்பாடு எட்டப்பட்டு ள்ளது.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பதில் தலைவர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தலைமையில் குழுவின் உறுப்பினர்கள் கூடி விரிவாக கலந்துரையாடி இந்த முடிவை எடுத்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தொடர் ந்தும் குற்றம் சுமத்தப்பட்டு வரும் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், தெரிவு க்குழுவிற்கு வந்து சாட்சியமளிக்கும் வரை விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு.

ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை இன்னும் பாரா ளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருப்பதால், பாராளுமன்ற தெரிவுக்குழு கட்டாயம் தொடர்ந்தும் இயங்க வேண்டும் என அரசாங்கம் கருதுகிறது.

விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முழுமையான அதிகாரம் சபாநாயகருக்கு இருப்பதால், குழுவின் உறுப்பினர்கள் நேற் று சபாநாயகர் கரு ஜயசூரியவை சந்தித்துள்ளனர்.

தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் ஜனா திபதியை சந்திப்பது தொடர்பாக இது வரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# தனிப்பட்ட அரசியலுக்காக நாட்டினுடைய அபிவிருத்தியை முடக்க இடமளிக்கமுடியாது

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

நாட்டை கட்டியெழுப்பும் வாவி, விவசாய, கல்வி மற்றும் கைத்தொழில் புரட்சியை முடக்கி மேலெழுந்துள்ள குரோத மற்றும் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களை அடை ந்துகொள்வதற்கான புரட்சியின் காரணமாக நாட்டின் அபிவிருத்தி பின்னடைந்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார்.

இந்த தனிப்பட்ட அரசியல் நோக்கங்க ளுக்காக நாட்டின் அபிவிருத்தியையும் மக்களின் தேவைகளையும் முடக்குவதற்கு இடமளிக்க முடியாதெனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார். "வளமான தேசத் தின் வாவி புரட்சி" எல்லங்கா குளக் கட்ட மைப்பின் புனர்நிர்மாண செயற்திட்டத்தின் குருநாகல் மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரி வித்தார்.

3000 ஏக்கர் வயல் காணிகளில் அறுவ டையை மேற்கொள்வதுடன், ஆயிரக் கணக் கான குடும்பங்களின் விவசாய பொரு ளாதா ரத்தை வலுவூட்டுவதுடன் இணைந்ததாக 21 வாவிகளை அபிவிருத்தி செய்யும் செயற் திட்டம் குருநாகல் மேற்கு பண்டுவஸ்நுவர கொட்ட கிம்புலாகட அணைக்கட்டிற்கு அருகில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரித் பாராயணத்திற்கு மத்தியில் ஜனா திபதியினால் வாவி புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனா திபதி, சுற்றாடலையும் வன வளத்தையும் பாதுகாப்பதற்கு தான் பல தீர்மானங்களை மேற்கொண்டது நாட்டு மக்களின் சுவா சிக்கும் உரிமையை உறுதிப்படுத்துவதற் காகும் எனக் குறிப்பிட்டார். அந்த தீர் மானங்கள் குறித்து தன்மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோதும், வன வளத்தை பாதுகாக்கும் பொறுப்பு எவரும் தட்டிக்கழிக்க முடியாத ஒரு பொறுப்பாக இன்று மாறி யிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட் டினார்.

நாடு என்ற வகையில் நாம் முன்னோக் கிச் செல்வதற்கு நாட்டின் விவசாயத் துறை யை கட்டியெழுப்பி விவசாயிகளை வலுவூட்ட வேண்டுமென குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட் டின் வாவிகள் மற்றும் விவசாயத்துறைக்காக மேற்கொள்ள முடியுமான அனைத்து பொ றுப்புக்களையும் நிறை வேற்றி கடந் தகால கீர்த்தியை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்க அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் தெரி வித்தார்.

விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக் காக கமநல அபிவிருத்தி திணைக்களத் தினால் வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு நிவாரணக்கடன் பெற்றுக்கொடுத்தல், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சிறிய குளப் பிரதேசங்களை பாதுகாக்கும் நிகழ்ச் சித்திட்டத்தின் கீழ் 200 கருங்காலி மரக் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்குதல். உணவுற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத தின்கீழ் நடை முறைப்படுத்தப்படும் சில நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நன்மைகளை பெற்றுக்கொடுக்கும் நிகழ்வும் ஜனாதிபதி யினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆர்.டி.ஜனித் மதுசங்க என்ற மாண வனால் வரையப்பட்ட ஜனாதிபதியின் உருவப்படமும் ஜனாதிபதியிடம் இதன்போது கையளிக்கப்பட்டது.

(ம-3)

# மழை, காற்று அதிகரிக்கும் சாத்தியம்

வடக்கு பிரதேசத் தில் தற்போது நில வும் காற்று நிலை மை மற்றும் தென் மேற்கில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை எதிர் வரும் நாட்களில் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதி ர்வு கூறியுள்ளது.

இதனுடன் நாட் டின் ஏனைய பிரதே சங்கள் ஊடாக இடைக் கிடையில் மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டல வியல் திணைக் களம் மேலும் குறிப் பிட்டுள்ளது.

(ம-3)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

வெளிவாரிப் பரீட்சைகள் -2017
வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)

1. முதலாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை - 2017
2. இரண்டாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை - 2017
3. மூன்றாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை - 2017

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் யூலை மாத நடுப்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 05.07.2019 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
12.06.2019



பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



+ ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
+ பிரிந்து சென்றவர்களை மூன்று பொழு தில் சேரும்படி செய்ய முடியும்
+ கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
+ காணி விற்பனையில் பிரச்சினையா?
+ வியாபார முன்னேற்றம்
+ வீட்டில் ஒற்றுமை உண்டாக
+ பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களுக்கு வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (91 20)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -07[illegible] 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# பாராளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம்

# தேசிய பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும்

## சுசில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆராயும் நோக்கத்திற்கு அப்பாற்பட்டு அரசியல் நோக்கங்களைக் கொண்டுள்ளது என மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார். இதன் காரணமாகவே ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையே பாரிய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலைமை தொடருமாயின் தேசிய பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்படும் எனவும் சுசில் சுட்டிக்காட்டினார்**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது அரசியலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவே பிரதான காரணியாகவுள்ளது. குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உள்நோக்கத்தை கொண்டதாகக் காணப்படுகின்றது.

ஜனாதிபதியின் மீதே அனைத்து குற்றச்சாட்டுக்களும் சுமத்தப் பட்டுள்ளமையின் விளைவால் நிறைவேற்றுத்துறைக்கும் சட்டவாக்கத்திற்கும் இடையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக பிரயோகிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

குண்டுத் தாக்குதலில் பெரும்பாலான தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

நிறைவேறாத புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திலேயே கூட்டமைப்பு முழுமையாக தங்கியுள்ளது. அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் பயனற்றது. மக்களின் வரிப்பணமே வீணடிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்கும் இடையில் தற்போது காணப்படுகின்ற முரண்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல இடமளிக்க முடியாது. எனவே இவ்விடயம் தொடர்பில் இவ்வாரம் பொதுஜன பெரமுனவின் முக்கிய தரப்பினர்கள் அரசாங்கத் தரப்புடன் ஒரு சந்திப்பை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிங்கப்பூருக்கு பிரதமர் பயணம்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று சிங்கப்பூர் நோக்கிப் பயணமாகியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், இலங்கைப் பிரதிநிதிகள் இருவர் சென்றுள்ளனர்.

சிங்கப்பூர் விஜயத்தின் பின்னர், இவர்கள் நாளை 14 ஆம் திகதி மீண்டும் நாடு திரும்பவுள்ளனர். (இ-7)

# பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதியும் வெளிநாட்டுக்கு பயணம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தஜிகிஸ்தான் நாட்டுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அங்கு நடைபெறவுள்ள ஆசியாவின் நம்பகத்தன்மை மற்றும் ஒருங்கிணைவை கட்டியெழுப்புவதற்கான அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் ரஷ்ய மற்றும் சீன ஜனாதிபதி உள்ளிட்டவர்களும் பங்குபற்றவுள்ளனர்.

3 நாட்கள் தஜிகிஸ்தானில் தங்கவுள்ள ஜனாதிபதி, மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள முக்கிய தலைவர்களுடன் பிரத்தியேக சந்திப்புக்களை நடத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் நாட்டில் அசாதாரண சூழ்நிலை உருவாகிய நிலையில் இலங்கை அரசியலில் தற்போதும் பரபரப்பான சூழ்நிலையே நிலவுகிறது.

அத்தோடு முஸ்லிம் தலைவர்களின் ராஜினாமா, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் வெளிவரும் உண்மைகள், அமைச்சரவை இரத்து உள்ளிட்ட பல விடயங்கள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளின் மூலம் வெளிவரும் தகவல்கள் பெரும்பாலும் ஜனாதிபதிக்கு எதிராகவே அமைந்துள்ளன. இதன் காரணமாக குறித்த தெரிவுக்குழுவின் விசாரணைகளை நிறுத்துமாறு கோரியதுடன், தெரிவுக்குழுவின் உறுப்பினர்களை சந்திப்பதற்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். எனினும் அவர்கள் மறுத்து விட்டனர்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட விஜயமாக நேற்று சிங்கப்பூருக்கு பயணமாகியுள்ளார். இவ்வாறான நிலையில் இன்று ஜனாதிபதியும் தஜிகிஸ்தான் நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ்வாறு அரசியல் ஸ்திரமற்ற நிலையில் நாட்டை விட்டு ஜனாதிபதியும் பிரதமரும் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்வது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# ஜனாதிபதியை சண்டைக்கிழுக்கும் ஐ.தே.க. முட்டாள்தனமாக செயற்படுகின்றது-தயாசிறி



(கொழும்பு)

நாட்டின் ஸ்திரமான நிலையை மீண்டும் சீர்குலைக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகின்றது என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் இன்று நாடு ஸ்திரமான நிலையை அடைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றும் மக்களைப் பற்றிச் சிந்திக்காது முட்டாள்தனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தொடர்ந்தும் ஜனாதிபதியுடன் முரண்பட்டுக் கொண்டு பாரிய பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது.

தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து கூட்டு எதிர்க்கட்சியும் ஆதரவளித்தது.

தற்போது ஜனாதிபதியை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள். அவர்களது குறிக்கோள் நிறைவடையும் வரை முன்னெடுக்கப்படும்.

ஆனால் இந்த நிலைமை தொடர்ந்தால் அதனால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பிரதாயமாக ஒவ்வொரு வாரமும் கூடும் அமைச்சரவை இந்த வாரம் கூடவில்லை. செவ்வாய்க்கிழமை மீண்டும் தெரிவுக்குழு கூடியதால் வழமையான அமைச்சரவைக் கூட்டம் இடம் பெறவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையைக் கூட்டாமலிருப்பது குறித்து சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை வினவிய போதே தயாசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ரணில் சரி என்றால் களத்தில் குதிப்பேன்

## சஜித் அறிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்னை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கூறினால் நான் களமிறங்கத் தயாராகவே இருக்கின்றேன் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர்கள் எவரும் போட்டியிடமாட்டார்கள். இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வேட்பாளர் கட்டாயம் களமிறங்குவார். வேட்பாளர் பட்டியலில் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரே முதலிடத்தில் உள்ளது.

அதேவேளை, கட்சியின் பிரதித் தலைவரான எனது பெயரும் சபாநாயகர் கரு ஜெயசூரியவின் பெயரும் வேட்பாளர் பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களில் உள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் யார் என்ற விபரத்தை கட்சியின் உயர்பீடம் வெளியிடும்.

எனக்குப் பதவி ஆசை இல்லை. எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்னை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கூறினால் நான் களமிறங்கத்தயாராகவே இருக்கின்றேன்.

முன்னாள் ஜனாதிபதியான எனது தந்தை பிரேமதாஸ இந்த நாட்டுக்குச் செய்த சிறந்த சேவைகளை மக்கள் நன்கு அறிவார்கள். அதன் பிரகாரம் நானும் செயற்படுவேன் என சஜித் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆஸியுடன் போராடித் தோற்றது பாகிஸ்தான்

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானை 41 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது ஆஸ்திரேலியா.

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா அணிகள் மோதும் உலகக் கோப்பை தொடரின் 17-வது லீக் ஆட்டம் டான்டனில் நடைபெற்றது. டாஸ் வென்ற பாகிஸ்தான் கேப்டன் சர்பராஸ் அகமது பந்து வீச்சை தேர்வு செய்தார்.

இதையடுத்து ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களான டேவிட் வார்னர், ஆரோன் பிஞ்ச் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்தனர். பிஞ்ச் 82 ரன்னில் அவுட்டாகினார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய டேவிட் வார்னர் 107 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

ஸ்மித் (10), மேக்ஸ்வெல் (20), ஷான் மார்ஷ் (23), கவாஜா (18), அலெக்ஸ் ஹேரி (20) கவுல்டர் நைல் (2) ஆகியோர் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியா 49 ஓவரில் 307 ரன்கள் சேர்த்து ஆல்அவுட் ஆனது.

பாகிஸ்தான் இடது கை வேகப் பந்து வீச்சாளர் முகமது அமிரஅந்து விக்கெட்டுகள் எடுத்தார். முகமது



அமிரின் அபார பந்து வீச்சால் கடைசி 48 பந்தில் 39 ரன்களுக்குள் 6 விக்கெட்டை இழந்து பின்னடைவை சந்தித்தது.

அதன் பின்னர், 308 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ் தான் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் இமாம் உல் ஹக் நிதானமாக ஆடி அரை சதமடித்தார். அவர் 53 ரன்னில் வெளியேறினார்.

பாபர் அசாம் 30 ரன்னிலும், முகமது ஹபீஸ் 46 ரன்னிலும், ஹசன் அலி 35 ரன்னிலும் அவுட்டாகினர். இறுதிக்கட்டத்தில் கேப்டன் சர்ப்ராஸ் அகமதும், வஹாப் ரியாசும் வெற்றிக்காக போராடினர். ரியாஸ் 45 ரன்னில் அவுட்டானார். சர்ப்ராஸ் 40 ரன்னில் ஆட்டமிழந்தார்.

இறுதியில், பாகிஸ்தான் அணி 45.4 ஓவரில் 266 ரன்களை மட்டுமே எடுத்தது. இதையடுத்து ஆஸ்திரேலியா அணி 41 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலியா அணி சார்பில் பாட் கம்மின்ஸ் 3 விக்கெட்டும், மிட்செல் ஸ்டார்க், கேன் ரிச்சர்ட்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

# ஐ.சி.சி மீது மைக்கல் கோல்டிங் பாய்ச்சல்

வர்ணனையின்போது நடுவர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டாம் என்று ஐசிசி கேட்டுக்கொண்டதற்கு, ஹோல்டிங் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார் மைக்கேல் ஹோல்டிங்.

வெஸ்ட் இண்டீஸ் - ஆஸ்திரேலியா இடையிலான போட்டியின்போது நடுவர்கள் ஏராளமான தவறுகள் செய்தனர். குறிப்பாக ஆஸ்திரேலியாவுக்கு சாதகமாக நடுவர்கள் செயல்பட்டதால் வெஸ்ட் இண்டீஸ் அணி தோல்வியை சந்திக்க நேர்ந்தது.

நடுவர்கள் முடிவு குறித்து வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் ஹோல்டர் மற்றும் பிராத் வைட் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர். போட்டியின்போது வர்ணனை செய்து கொண்டிருந்த வெஸ்ட் இண்டீஸ் அணியின் முன்னாள் வீரரான மைக்கேல் ஹோல்டிங் 'நடுவர்களின் முடிவு மோசமானது' என்று தெரிவித்திருந்தார்.

இதனால் ஐசிசி வர்ணனையாளர்கள் லீக் போட்டியின்போது நடுவர்கள் குறித்து விமர்சனம் செய்யும்போது கவனமாக பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இதுகுறித்து மைக்கேல் ஹோல்டிங்கிற்கு இ-மெயில் அனுப்பியது.

இதனால் கடுங்கோபம் அடைந்த அவர், கால்பந்து போட்டியாக இருந்திருந்தால் நடுவர் வீட்டுக்கு போய் இருப்பார். கிரிக்கெட்டில் நான் வீட்டிற்கு செல்ல வேண்டுமா? என்று காட்டமாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து மைக்கேல் ஹோல்டிங் கூறுகையில் "ஆஸ்திரேலியா - வெஸ்ட் இண்டீஸ் இடையிலான போட்டியில் நடுவர்கள் செய்த தவறுகளை பிபா அம்பயர்கள் செய்திருந்தால், அவர்கள் வீட்டிற்கு சென்றிருப்பார்கள். அவர்கள் இன்னொரு உலகக்கோப்பைக்கான போட்டியில் நடுவராக செயல்பட முடியாது. ஒரு கிரிக்கெட்டராக, கிரிக்கெட் உயர்ந்த தரமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

# பாண்டியா குளூஸ்னருக்கு நிகரானவர் - ஸ்டீவ் வோக்

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நான்காவது வீரராக களம் இறங்கிய பாண்டியா, 27 பந்தில் 48 ரன்கள் குவித்தார். இவரது அதிரடி ஆட்டத்தால் இந்தியா 352 ரன்கள் குவித்தது.

இந்நிலையில் 1999-ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்தில் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஆல்ரவுண்டர் குளூஸ்னர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். நாக்அவுட் சுற்றில் தென் ஆபிரிக்கா தோல்வியடைந்தாலும், தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

இந்நிலையில் ஹர்திக் பாண்டியாவை குளூஸ்னருடன் ஒப்பிட்டார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் கேப்டன் ஸ்டீவ் வாக். ஹர்திக் பாண்டியா குறித்து ஸ்டீவ் வாக் கூறுகையில் "ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஹர்திக் பாண்டியா விளையாடிய அதிரடி ஆட்டம், மற்ற அணிகளுக்கு பீதியை கிளப்பியிருக்கும். 1999-ம் ஆண்டு நடைபெற்ற உலகக்கோப்பையில் குளூஸ்னர் எப்படி செயல்பட்டாரோ, அதேபோல் ஹர்திக் பாண்டியா இந்த முறை ஆதிக்கம் செலுத்துவார். தனது அதிரடி ஆட்டத்தின்மூலம் போட்டியை சிறப்பாக முடிக்கும் திறமை அவரிடம் உள்ளது" என்றார்.

# அதிகம் சம்பாதிக்கும் கிரிக்கெட் வீரர்களில் கோலி முதலிடம்

உலகில் அதிக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்கள் பட்டியல் வெளியிட்டுள்ள நிலையில் கிரிக்கெட் வீரர்களில் விராட் கோலி ஒருவர் மட்டுமே இடம் பெற்றுள்ளார்.

இந்திய அணிக்கு 3 நிலைகளிலும் (டெஸ்ட், ஒரு நாள் போட்டி, 20 ஓவர்) கேப்டனாக இருப்பவர் விராட் கோலி. தனது அதிரடியான ஆட்டம் மூலம் பல்வேறு சாதனைகளை புரிந்து உலகின் சிறந்த பேட்ஸ்மேன்களில் ஒருவராக திகழ்கிறார்.

அபாரமான ஆட்டம் மூலம் கோலி கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கிறார். விளம்பர நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு அவரை ஒப்பந்தம் செய்து வருகின்றன.

உலகில் அதிக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்கள் பட்டியலை "போர் பஸ்" வெளியிட்டுள்ளது. 100 கொண்ட இந்த பட்டியலில் கிரிக்கெட் வீரர்களில் விராட் கோலி ஒருவர் மட்டுமே இடம் பெற்றுள்ளார். அவர் கடந்த ஆண்டில் ரூ.173.48 கோடி சம்பாதித்து உள்ளார்.



இதில் விளம்பரம் மூலம் மட்டும் அவர் கடந்த ஆண்டில் ரூ.145 கோடி வருவாய் ஈட்டியுள்ளார். மீதி உள்ள தொகையை அவர் விளையாட்டு மூலம் சம்பாதித்து உள்ளார்.

குத்துச்சண்டை வீரர் மேவெதர் ரூ.881 கோடி சம்பாதித்து முதல் இடத்தில் உள்ளார். அதற்கு அடுத்தபடியாக கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்ச்சுக்கல்) ரூ.756 கோடி சம்பாதித்து 2-வது இடத்திலும், மற்றொரு கால்பந்து வீரர் நெய்மர் (பிரேசில்) ரூ.728 கோடி வருவாய் ஈட்டி 3-வது இடத்திலும் உள்ளனர்.

# நியூசிலாந்து-இந்தியா இன்று மோதல்; இந்தியாவின் வெற்றி தொடருமா?

உலக கோப்பை போட்டியில் நியூசிலாந்து அணியுடன் இன்று மோதும் இந்திய அணி ஹாட்ரிக் வெற்றி பெறும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

12-வது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 10 நாடுகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் ரவுண்டு ராபின் முறையில் ஒரு ஆட்டத்தில் விளையாட வேண்டும். அதன்படி ஒவ்வொரு அணிக்கும் 9 ஆட்டம் இருக்கும். 'லீக்' முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும்.

விராட்கோலி தலைமையிலான இந்திய அணி தான் மோதிய 2 ஆட்டத்திலும் வெற்றி பெற்றது. முதல் போட்டியில் தென் ஆபிரிக்காவை 6 விக்கெட் வித்தியாசத்திலும், 2-வது ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை 36 ரன் வித்தியாசத்திலும் வீழ்த்தியது.

இந்திய அணி 3-வது ஆட்டத்தில் நியூசிலாந்தை இன்று (13-ந் தேதி) எதிர்கொள்கிறது. நாட்டிங்காமில் உள்ள டிரென்ட் பிரிட்ஜ் மைதானத்தில், இந்திய நேரப்படி மாலை 3 மணிக்கு இந்தப் போட்டி நடக்கிறது.

பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் சம பலத்துடன் திகழும் இந்திய அணி, நியூசிலாந்தை வீழ்த்தி 'ஹாட்ரிக்' வெற்றியை பெறுமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

நியூசிலாந்து அணி இதுவரை தோல்வியை சந்திக்கவில்லை. தான் மோதிய 3 ஆட்டத்திலும் வென்று இருந்தது. இதனால் அந்த அணியை வீழ்த்துவது சவாலாக விளங்கும்.

ஆனால் அதே நேரத்தில் நியூசிலாந்து பெரிய அணிகளுக்கு எதிராக இந்த வெற்றியை பெறவில்லை. இதனால் நம்பிக்கையுடன் இந்திய அணி விளையாடும்.

தொடக்க வீரர் தவான் காயம் அடைந்தது இந்திய அணிக்கு மிகப்பெரிய பாதிப்பாகும். பெருவிரலில் ஏற்பட்ட எலும்பு முறிவால் அவர் 2 போட்டிகளில் ஆடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் நாடு திரும்ப மாட்டார் என்பதால் மாற்று வீரர் அனுப்பப்படமாட்டார்.

தவான் இன்றைய போட்டியில் ஆட மாட்டார் என்பதால் ரோகித் சர்மாவுடன் தொடக்க வீரராக லோகேஷ் ராகுல் விளையாடுகிறார். அவர் தற்போது 4-வது வரிசையில் விளையாடி வருகிறார்.

இதனால் 4-வது வரிசையில் தமிழகத்தை சேர்ந்த தினேஷ் கார்த்திக் அல்லது விஜய் சங்கர் ஆகியோருக்கு வாய்ப்பு கிடைக்கும்.

தினேஷ் கார்த்திக் அனுபவம் வாய்ந்தவர். விஜய் சங்கர் ஆல்ரவுண்டர் வரிசையில் ஜொலிக்க கூடியவர். இருவரும் உலக கோப்பையில் இதுவரை விளையாடவில்லை.

அதே நேரத்தில் ரவீந்திர ஜடேஜாவுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆல்ரவுண்டரில் முத்திரை பதிக்கக்கூடியவர். மேலும் அனுபவம் வாய்ந்தவர். இதனால் ஜடேஜா முன்னுரிமையில் இருக்கிறார். ஆடுகளத்தின் தன்மையை பொறுத்து வீரர்கள் தேர்வு இருக்கும்.

இந்திய அணியின் பேட்டிங் வலுவாக இருக்கிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இதை காண முடிந்தது. ரோகித் சர்மா, கேப்டன் விராட் கோலி, ஹர்திக் பாண்டியா, டோனி, ராகுல் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

இதேபோல பந்து வீச்சும் நேர்த்தியுடன் இருக்கிறது. வேகப்பந்தில் பும்ரா, புவனேஷ்வர்குமார் ஆகியோரும் சுழற்பந்தில் யசுவேந்திர சாஹல், குல்தீப் யாதவ் ஆகியோரும் திறமையாக வீசி வருகிறார்கள்.

பந்து வீச்சாளர்கள் நல்ல நிலையில் இருப்பதால் அணியில் மாற்றம் செய்யப்படமாட்டாது. இதனால் முகமது சமிக்கு வாய்ப்பு கிடைப்பது கடினம். ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் கூடுதல் சாதகமாக இருந்தால் குல்தீப் யாதவ் இடத்தில் அவர் தேர்வாகலாம்.

வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி இந்தியாவை வீழ்த்தி 4-வது வெற்றியை பெறும் ஆர்வத்தில் உள்ளது.



அந்த அணி தொடக்க ஆட்டத்தில் இலங்கையை 10 விக்கெட் வித்தியாசத்திலும், 2-வது போட்டியில் வங்காள தேசத்தை 2 விக்கெட் வித்தியாசத்திலும், 3-வது ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானை 7 விக்கெட் வித்தியாசத்திலும் வீழ்த்தியது.

நியூசிலாந்து அணியின் பேட்டிங்கில் கேப்டன் வில்லியம்சன், காலின் முன்ரோ குப்பில் ஆகியோரும், பந்துவீச்சில் டிரான்ட் போல்ட், ஹென்றி, ஜேம்ஸ் நிசம் ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர்.

நியூசிலாந்து மிகப்பெரிய அணியுடன் தற்போது மோதுவதால் மிகவும் கவனத்துடன் விளையாடும். அதே நேரத்தில் இங்கிலாந்து போன்ற ஆடுகளங்களில் அந்த அணி வீரர்கள் திறமையாக ஆடக் கூடியவர்கள்.

இன்றைய ஆட்டத்திலும் மழை அச்சுறுத்தல் இருக்கிறது. பிற்பகல் மழை பெய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளும் கடைசியாக இந்த ஆண்டு ஜனவரி- பிப்ரவரி மாதம் நியூசிலாந்தில் ஒரு நாள் தொடரில் மோதின. இதில் இந்தியா 4-1 என்ற கணக்கில் தொடரை வென்று இருந்தது.



தமிழ் மக்கள் கூட்டணியின் மக்கள் சந்திப்பு மண்டைதீவில் அண்மையில் இடம்பெற்றது. தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பிரிவு உப செயலாளர் தவச்செல்வம் சிற்பரன் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் வே.ஞானோதரன் வரவேற்புரை வழங்கினார்.

இதில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமாகிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் . பேராசிரியர் வி.பி.சிவநாதன் எனப் பலரும் உரையாற்றினர்.

# காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்து ஐ.நா.சபைக் கூட்டத்தில் வலியுறுத்து

(ஜெனீவா)

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது.

உலக நாடுகளில் யுத்த சூழ் நிலையில் காணாமல் போனவர்கள் சம்பந்தமான விடயங்களைக் கையாளுவதற்கான தீர்மானம் ஒன்றை முதன் முறையாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை நிறைவேற்றியது.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் கருத்துக்களை முன்வைத்தபோதே இலங்கையில் காணாமல்போயுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் தொடர்பாக விவாதத்தில் கலந்து கொண்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

இலங்கையில் காணாமல் போனவர்கள் தொடர்பாக பல தசாப்தகாலமாக விடை தெரியாதிருப்பதாகவும் இவ்வாறான நிலைமை குறித்து வினைத்திறனான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

யுத்தத்தில் ஈடுபடுகின்ற அனைத்துத் தரப்பும் காணாமல் போகின்றவர்களை முறையாகத் தேடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அவர்கள் தொடர்பான சரியான விபரங்களை வேறுபாடுகள் இன்றி வைத்திருக்கவும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

மனிதர்கள் காணாமல் போவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுப்பதுடன் குறிப்பாக சிறார்கள் காணாமல் போகின்ற நிலைமை குறித்து கூடிய அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறான நிலையில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு அமைய இலங்கை குறித்து அதிகம் கவனம் செலுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# பதில் அமைச்சர் நியமனத்திற்கு அனுப்பிய பட்டியல் நிராகரிப்பு?

(கொழும்பு)

பதவிகளிலிருந்து விலகிய முஸ்லிம் அமைச்சர்களின் இடத்திற்கு பதில் அமைச்சர்களாக நியமிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியால் அனுப்பப்பட்ட பெயர் பட்டியலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.தே.கவால் அனுப்பப்பட்ட பட்டியலைப் புறக்கணித்து விட்டே ஜனாதிபதி தான் விரும்பியவர்களுக்கு நியமனங்களை வழங்கியுள்ளதாக அரசாங்க வட்டாரங்களை ஆதாரம் காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

ஐ.தே.கட்சியால் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, மலிக் சமரவிக்கிரம, ரஞ்ஜித் மத்தும பண்டார ஆகியோரின் பெயர்கள் இந்த பதில் அமைச்சர்கள் நியமனத்திற்கு பிரேரிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமையினால், ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் அரசியல் நெருக்கடி நிலைமை மேலும் அதிகரித்துள்ளதாகவும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(இ-7)

# பணிப்புறக்கணிப்பு தோல்வி

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபையின் தேசிய சேவைகள் சங்கப் பணியாளர்கள் ஆரம்பித்த பணிப்புறக்கணிப்பு தோல்வியில் முடிவடைந்ததாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் உபாலி மாரசிங்க தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள 107 சாலைகளில் 32 டிப்போக்களில் இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்பளப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை போக்குவரத்து சபையின் தேசிய சேவை சங்கப் பணியாளர்கள் கடந்த 2 நாட்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தா முன்னிலையில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் உபாலி மாரசிங்க இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# கும்பாபிஷேகம்

(கரணவாய்)

முள்ளியான். மண்டலாய் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.22 மணி முதல் முற்பகல் 10.34 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும். இன்று வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும். (5-60)

# இராசி பலன்

**மீனம்**: மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வரவும், செலவும் சமமாகும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.

**மேடம்**: உடல் நலன் சீராகும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்**: குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் , உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்**: பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்**: முன்னேற்றம் பெற பெரிதும்பாடுபடுவீர்கள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்**: தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**மகரம்**: வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர்களின் சந்திப்பால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்**: பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்**: திட்டமிடப்படாத காரியமொன்று நிறைவேறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி**: சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, ரோக பயமுண்டு.

கிரகநிலை: சூரி, சுக் | ராகு, புத,செவ் | சனி, கேது | குரு | சந்

சந்திராஷ்டமம்: உத்திரட்டாதி, ரேவதி

13.06.2019
வைகாசி 30, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 5.56 மணிவரை
சித்திரை பிற்பகல் 12.17 மணிவரை
சுபநேரம் 7.22- 8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

வளவன்

# கர்ப்பிணித் தாய்மார்கள் தமது வதிவிடங்களை உறுதி செய்யவும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கர்ப்பிணித் தாய்மார் மகப்பேற்றுக்கு முன்னராக தமது வதிவிடத்தை சாவகச்சேரி நகரசபையில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மகப்பேற்றுக் காலத்தில் வழங்கப்படுகின்ற மகப்பேற்று உதவிப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிலருக்கு பதிவுகள் தடையாகக் காணப்படுவதால் அதனை முன்னரே நகர சபையில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

சில கர்ப்பிணித் தாய்மார் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வசிக்கின்ற போதிலும் அவர்கள் அந்தந்த கிராமங்களில் பதிவு செய்யாமல் இருப்பதனால் இந்தச் சிக்கல் நிலை ஏற்பட்டிருப்பதாக மேலும் தெரிவித்துள்ளனர். (5-30)

# மூன்று மாணவிகள் தேசிய ரீதியில் தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையைச் சேர்ந்த மாணவிகள் கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட " நூல்களாகிய தோழர்களே நேசமிகு நண்பர்கள்" எனும் நூலகப் போட்டியில் கலந்து கொண்டு தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டு வெளிநாடு செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். டெ.மதியரசி. வி.மதுஷா. கோ. கஜேந்தினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-7)

## கொக்குவில் இந்துவில் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த.உயர்தரம் 2021 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் எனவும் அனுமதி பெற்ற மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறும் கல்லூரி அதிபர் எம்.ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (5)

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ். மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், காரைநகர், கைதடி, பண்டத்தரிப்பு, சுன்னாகம் மற்றும் வல்வெட்டித்துறை தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்கைநெறிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவை மூன்று மற்றும் ஆறு மாதங்கள் பயிற்சிக் காலத்தைக் கொண்ட இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்- 3/4 (NVQ-3/4) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளை முழுமையாக பூர்த்தி செய்து NVQ சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் அனைவருக்கும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இக்கற்கைநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். ( 021 222 7949/077 716 1955/ 071 031 8737/ 071 079 6440/ 071 031 8865/ அல்லது காரைநகர் (021 221 1793/ 071 031 8862), கைதடி ( 021 223 2592/ 071 031 8863), சுன்னாகம் (021 224 1851/ 076 686 7018) , பண்டத்தரிப்பு ( 077 618 4752), வல்வெட்டித்துறை ( 021 226 2550/ 071 031 8864) ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 22.06.2019 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-5)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்கைநெறிகளை நிறைவு செய்தவர்களுக்கு NVQ சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (இ-5)

## சீன சுற்றுப் பயணத்திற்கு மாணவி தெரிவு



(யாழ்ப்பாணம்)

"தோழர்களாகிய நூல்களே நேசமிகு நண்பர்கள்" எனும் தேசிய மட்ட வாசிப்புப் போட்டியில் பங்குபற்றிய உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவி குளோட்சாரா றொஜந்தன் சீனாவுக்கு சுற்றுப் பயணம் செல்வதற்காக தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (5)

# முறைப்பாடுகளைப் பதிவதில் பொதுமக்களுக்கு சிரமம்

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தமிழ் பொலிஸார் இருந்தும் அவர்கள் வேறு கடமைகளுக்காகச் செல்வதனால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை பதிவுசெய்ய வரும் பொதுமக்கள் காலையில் இருந்து காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக பொறுப்பதிகாரியை பலமுறை கேட்டபோது தமிழ் பொலிஸார் அதிகமாக இருப்பதாகக் கூறுகின்றனர்.

முறைப்பாடு பதிவு செய்ய வரும் பொதுமக்கள் சிரமங்களை கருத்திற் கொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் பொலிஸ் உயர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-60)




# தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் வெற்றி

## நகர சபை உறுப்பினர் சர்வானந்தன் தகவல்

(யாழ்ப்பாணம்)

அறுபது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் வெற்றியளித்திருப்பதாக சாவகச்சேரி நகரசபையின் ஐ.தே. கட்சி உறுப்பினர் குமாரு சர்வானந்தன் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற சமுர்த்தி பயனாளிகளுக்கான உரித்துச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச செயலகம் அறுபது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட பரந்துபட்ட பிரதேசமாகும். முப்பது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட பிரதேச செயலகங்களில் இரண்டாயிரம் சமுர்த்தி பயனாளிகளைத் தெரிவு செய்கின்ற போது அறுபது கிராம உத்தியோகத்தர் பிரிவைக் கொண்ட தென்மராட்சியில் 1435 பயனாளிகள் என்பது எந்த வகையில் நியாயமானது? தென்மராட்சியில் மேலும் இரண்டாயிரம் பேர் சமுர்த்தி பயனாளிகளாக உள்ளீர்க்கப்பட வேண்டும். அத்துடன் தென்மராட்சி பிரதேச செயலகமும் விரைவில் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் இன்று வெற்றியளித்து தயார் நிலையில் காணப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன் ஆகியோரின் முயற்சி தான் இதற்குக் காரணம். தற்போது சுமுகமான அரசியல் நகர்வு இடம்பெறுகின்றது. தேசிய அரசாங்கத்தில் த.தே. கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.கட்சி இணைந்து செய்ய இயலாதது என்று எதுவுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5-30)

## மாதாந்த அமர்வு நாளை

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் புத்தூரில் உள்ள பிரதேச சபைத் தலைமைக் காரியாலய மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் இடம்பெறும். (5-10-134)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலையத் தலைவர் நா.சரவணமுத்து தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபையின் தலைவராக க.யோகேஸ்வரன்.உப தலைவராக நா.சரவணமுத்து, செயலாளராக ப.நிதுஷன். உப செயலாளராக க.இராசரத்தினம் மற்றும் பொருளாளராக டி.மீரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.நிகழ்வில் பிரதம விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவீற்ரா கலந்து கொண்டார். (5-30)

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கலைவாணி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் ஜே/ 270 கிராம உத்தியோகத்தர் எஸ். சண்முகவடிவேல் வழிநடத்தலில் நடைபெற்றது.

இதில் தலைவராக ஆ.சுந்தரமூர்த்தி.உப தலைவராக. சு.குணசிங்கம். செயலாளராக சீ.மோகன். உப செயலாளராக செ.பொன்னுத்துரை, பொருளாளராக கு.அற்புதராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5)




கார்மேல் முன்பள்ளியின் சிறுவர் பூங்காவை நேற்று முன்தினம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான சொலமன் சூ.சிறில் திறந்து வைத்தார். இப்பூங்கா கம்பரெலிய திட்டத்தின் மூலம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டது.

## பிரமோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான விஹாரி வருஷ திவ்ய பிரமோற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பற உற்சவமும் மறுநாள் காலை 9.30 மணியளவில் இரதோற்சவமும் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 8 மணியளவில் அபிஷேகமும் முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெறும். (5)

# சுதந்திரக் கட்சிக்கு 17 புதிய அமைப்பாளர்கள் நியமனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிய தொகுதி அமைப்பாளர்கள் 17 பேர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று நியமிக்கப்பட்டனர்.

இதன்படி, கெஸ்பேவ தொகுதி, கம்பஹா, ஜாஎல தேர்தல் தொகுதி, நீர்கொழும்பு, ஹொரன, பேருவளை, களுத்துறை மாவட்டம், கண்டி பாததும்பறை தொகுதி, உடுதும்பறை, இரத்தினபுரி மாவட்டம் என்பவற்றுக்கு புதிய அமைப்பாளர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர். (இ-7)

## INVITATION FOR BIDS
## Department of Agrarian Development, Vavuniya

1.The Chairman, District Procurement Committee on behalf of Department of Agrarian Development, Vavuniya invites sealed bids from eligible and qualified bidders for the construction works described in the table below.

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure. However limited to the bidders whose registration address should be within the administrative boundary of the Northern Province, to be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field and grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD)/Construction Industry Development Authority(CIDA) according to Circular Number 04/2016(i) dated 30.09.2016 of Ministry of Finance.

3.The Qualifications requirements are indicated in section - 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section- 5) of the bidding documents.

4.Bidder who eligible for VAT they should submit active VAT Registration Certificate along with Bid document,

5.Interested bidders may obtain further information from Department of Agrarian Development, Vavuniya and inspect the bidding documents at the same place on any working days from 9.00 am to 4.00pm.

6.A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Commissioner, Department of Agrarian Development, Vavuniya. From 13.06.2019 until 26.06.2019 from 9.00 am to 2.30 pm upon payment of non-refundable fees of Rs 1,000.00. The method of payment should be by cash.

7.Bids must be delivered to The Chairman, District Procurement Committee, Department of Agrarian Development, Vavuniya by Registered Post or Directly put into the Tender Box on or before 10.00am on 27.06.2019. **Name of work and Contract number should mention in the left hand corner of Envelop. Original and Copy of Bid have to submit in separate Envelops.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or bidders representatives who choose to attend.

8.All Bids shall be accompanied by a Bid security in the form of Bid security included in section- 9. The amount and validity of bid security shall be as per the information given in the table below.

9.A pre-bid meeting will be held at Department of Agrarian Development, Vavuniya on 20.06.2019 at 10.00 am. Interested bidders may participate in this meeting on their own expenses.

10. Decision of the Procurement committee will be the final.

| Contract No | Description of Works | Estimate Amount (excluding taxes) (Mn) | Contract Period | Required Grade & Field | Bid Validity Period | Required Bid Security: Bid Security Amount (Rs) | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 281/12/17/94/01-09 | Karambaikulam | 4.21 | 90 days | C8 or Above Irrigation & Land Drainage | 28/08/2019 | 42,000.00 | 25/09/2019 |
| 281/12/17/94/01-11 | Navatkulam | 4.22 | 90 days | C8 or Above Irrigation & Land Drainage | 28/08/2019 | 43,000.00 | 25/09/2019 |

Note: According to Circular Number 04/2016(i) dated 30.09.2016 of Ministry of Finance, C8 will be preference.

**The Chairman,**
**Department Procurement Committee,**
**Department of Agrarian Development,**
**Vavuniya.**

(C-6670)

## NOTICE
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA
## VACANCY FOR A POST OF MANAGER
## UNIVERSITY BUSINESS LINKAGES (UBL) CELL

**Applications are invited for the above post on contract basis from suitably qualified persons up to 25th June 2019.**

**Applicants who are interested in the above post are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for details.**

**Registrar**

(C-6658)

## அச்சுவேலி இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபம்
## ஓர் நற்செய்தி

**01.07.2019 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது.**

● குளிரூட்டி வசதியுடன் மண்டபம் இலவசம்.

உணவுக்கு மட்டும் ரூபா 400 ஒரு சாப்பாட்டிற்கு. அத்துடன் குளிர்பானம், தண்ணீர்ப்போத்தல், பூந்தி லட்டு, ஐஸ்கிறீம், வடை, பாயாசத்துடன் சாப்பாடு, முகப்பு வாழைக்குலை, திருமணத்துக்கான கிரியைப் பொருட்கள் 07 தேங்காய், 03 சோடி மாலை, ஐயருக்கான அரிசி, மரக்கறி வகை என்பனவும் வழங்கப்படும்.

● தனித்தனிய மண்டபம்- சாப்பாடு பெற விரும்புபவர்களுக்கு மேசை, கதிரை வசதிகளுடன் கூடிய மண்டபத்துக்கு கட்டணம்:- 30 ஆயிரம் ரூபா. வடை பாயாசத்துடன் சாப்பாடு ஒன்று 160 ரூபா.

● வேறு வீடியோ, போட்டோ படப்பிடிப்புக்கு அனுமதிக்கப்படும்.

● மகிழ்ச்சிகரமான செய்தி

திருமண நேர்த்திற்காக தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு கதிரைகளுடன் கூடிய மண்டபம் ரூபா 20 ஆயிரம். வடை பாயாசத்துடன் கூடிய சாப்பாடு- 150 ரூபா.

● முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

(9092) **"உங்கள் திருப்தியே எங்கள் சேவை"**

**இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபம்**
**அச்சுவேலி- 077 305 3080**

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:சதயம் 3
கி.பா:44 ½செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L, France
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9775

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:விசாகம் 2
கி.பா: 29 ½செவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:Electric Electronic Engineering (NVQ), தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9776

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:சதயம் 3செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L, தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: A/L, அரசதொழில்/வெளிநாடு
தொ.இ: B/9777

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்ரோகிணி 2சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, France
எதிர்பார்ப்பு: வெளிநாடுPR
தொ.இ: B/9778

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 20செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5296

பிறப்பு: 1986 கிறிஸ்தவம்
நட்சத்திரம்:பூராடம்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:MBBS Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Accountant (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/5311

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:சித்திரை 4
கி.பா: 13 ½செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:B.Tech, CIMA, MBA.Reading, Ass. Manager
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம் (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/5314

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:சுவாதி 1
கி.பா: 32 ¾
உயரம்: 160cm
தகைமை/தொழில்:B.A Following, PostMaster
எதிர்பார்ப்பு: விவாகரத்துஏற்கப்படும் (உள்நாடு)
தொ.இ: G/5320

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**



# புதுமைகள் பல புரிய அருள்பெற்ற புனித அந்தோனியார் திருவிழா இன்று

புதுமைகள் பல புரிய அருள் பெற்ற புனித அந்தோனியார் தேவாம்சம் பொருந்திய பிரபுக்கள் குடும்பத்தில் மாட்டீனுக்கும் தெரசாவுக்கும் மகனாக போர்த்துக்கல் தேசத்தின் லிஸ்பன் நகரில் 1195 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் சிறுவயது முதலே இறைவனில் பக்தி கொண்டதனால் புனித பிரான்சிஸ்கன் சபையில் துறவறத்தில் இணைந்து கொண்டு திருமுழுக்கினால் பேடினன் என பெற்ற பெயரை அந்தோனி என மாற்றி அந்தோனியானார்.

அந்தோனியார் எப்பொழுதும் செபம் செய்பவர். செபமாலையுடனும் வேதாகம புத்தகத்துடனும் தென்படுவார். இவர் கிறிஸ்து நாதரில் வைத்த அசைக்க முடியாத நம்பிக்கையினால் இவரின் இடது கரத்தில் வேதாகம புத்தகத்தின் மீது குழந்தை யேசு அமர்ந்தார்.

தனது தவத்தாலும் கடின செபத்தின் வல்லமையினாலும் இறை அன்புக்கு பாத்திரமாகி இறைவனின் நேசதோழராகியதால் புதுமைகள் பல புரியும் அருளினையே இறைவனிடமிருந்து அதிகமாகப் பெற்றுக் கொண்டார்.

திருப்பலி வேளையில் இறைவனின் பிரசன்னம் தேவ நற்கருணையில் இருப்பதை அறியாதவர்கள் உணவற்றுவாடியிருந்த கழுதைக்கு முன் உணவளித்த போதும் உணவைப் பொருட்படுத்தாது கழுதை தேவநற்கருணையினை மண்டியிட்டு வணங்கியதைக் கண்டு நம்பிக்கையற்றோருக்கு அன்று இறை சித்தத்தை உணரவைத்தார் புனிதர்.

வேதநூல்களை வாசிப்பதிலும் ஆழமான அர்த்தங்கள் நிறைந்த மறையுரைகளை ஆற்றுவதிலும் விற்பன்னராக விளங்கிய இவர் இறைவனின் சம்மட்டி எனவும் அழைக்கப்பட்டார். அக்காலத்தில் புனிதரின் மறையுரையைக் கேட்ட மக்கள் பலர் பாவ வாழ்க்கையை விட்டு விலகி இறைவனின் அண்டை வந்தார்கள். இதனால் புனிதர் தலை சிறந்த போதகரானார்.

இவரின் மறையுரைகள் ஒரு பாஷையில் நிகழ்த்தப்படுகின்ற போதும் அனைத்து பாஷையில் உள்ளோரும் அறியக்கூடியதாக இருந்தது. காணாமற் போனவற்றைக் கண்டடைய செய்வதில் வல்லமைபெற்றவர்.மனிதருக்கு போதனை செய்ய கடல் மீன்களும் கரையை நாடின.

பசாசுகள், தீய ஆவிகளை சிலுவை அடையாளம் கொண்டு விரட்டி ஓட்டும் புலமை பெற்றவர். உடல் நோய்களை, மனநோய்களை குணமாக்கினார். இவரின் அற்புதங்கள் எண்ணில் அடங்காதவையினால் கோடி அற்புதர் எனப் பெயர் பெற்றார்.

கோடி அற்புதர் 36 வருடங்களே இப் பூவுலகில் வாழ்ந்தார். 1231 ஆம் ஆண்டு ஆனி மாதம் 13 ஆம் திகதி இப் பூவுலகைவிட்டு விண்ணுலகு சென்றார்.இவர் இறந்த இந்நாளே கத்தோலிக்க மக்களால் திருவிழாவாக கொண்டாடப்படுகின்றது. புனிதரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது செவ்வாய்க்கிழமையாகும். இச் செவ்வாய்க்கிழமையே புனிதருக்கு உரித்தானது.

வாழ்நாளிலே புதுமைகள் புரிந்தவர் தனது மரணத்தின் பின்னரும் அற்புதங்கள் புரிந்தமை கண்டு வியந்தவர்கள் பலவருடங்களின் பின்னர் அவரின் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையை திறந்து பார்த்தனர். அங்கு அவரின் புதுமைகள் புரிந்த நாக்கு அழியாமல் இருந்தது. "நா" அழியாவரத்தினைப் பெற்றவர் ஆனார்.

"நா" அழியாவரத்தினைப் பெற்ற புனிதரின் ஆலயங்கள் நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் அமைந்திருப்பதைக் காணலாம்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயமும் சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றாகும். இவ் ஆலயத்தில் அண்மையில் திருப்பலி வேளையில் நடத்தப்பட்ட கொடிய பயங்கரவாத தாக்குதல் மக்களின் மனங்களை கலங்க வைத்தன. ஆனால் ஆன்மீக நம்பிக்கைகள் தளரவில்லை.

யாழ். மாநகரின் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் பதியாகும். புனிதரின் திருநாளினை நவநாட்களுடன் சிறப்பாக கொண்டாடுவதனை பாரம்பரிய வழக்கமாக கொண்டுள்ளனர். தற்போதைய நிலையில் நாட்டின் பாதுகாப்பு கருதி புனிதரின் திருப்பலி தேர்ப் பவனியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இங்கே கடல் நடுவே மீனினங்களை வரவழைக்கும் கடல் அந்தோனியின் திருவுருவம் அமைக்கப்பட்டு மீனவர்களின் தொழில் துறைகளைப் பாதுகாத்து வருவது இப்பதியின் சிறப்பாகும்.

இன, மத, மொழி பேதமின்றி வாழ்க்கையின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு முதற்கொண்டு உடல்நலம், மனநலம், ஆன்மீகநலம் முதலான பல்வேறு உதவிகளை நாடி புனிதரை தேடி வருவோரின் எண்ணிக்கை ஏராளம்.

இறையருள் அற்ற சமூகத்தினரிடையே ஆன்மீகக் கட்டுக்கோப்புக்கள் சிதைக்கப்பட்டு வருவதைக் காணலாம். இதனால் சமூக கலாசார சீரழிவுகள், வாள் வெட்டுக்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், விபச்சாரம், கடன் தொல்லை, கொலைகள், தற்கொலைகள், மாற்றமுடியாத உடல் நோய்கள், மனநோய்கள், குடும்பப் பிரிவுகள், புகை, மது, போதைப் பொருட்களின் பாவனைகள் அதிகரிக்கப்படுவதைக் காணலாம். உடல்நலம், மனநலம், குடும்ப நலனுடன், ஆன்மீக நலனிலும் அக்கறை அதிகரிக்கப்பட வேண்டியதற்கான விழாக்களே புனிதரின் திருவிழாவாகும்.

ஆனி 13 புதுமைகள் புரியும் புனித அந்தோனியாரின் திருவிழாவாகும். அன்றைய தினம் புனிதர் தேரில் வலம் வருகின்றார். அவ்வேளை தமது விண்ணப்பங்கள், வேண்டுதல்கள், தேவைகளை புனிதரிடம் சமர்ப்பித்து வாழ்நாளில் புதுமைகளைப் பெற்றுக் கொள்ள புனித அந்தோனியாரை பக்தியுடன் நாடுவதோடு நாமும் நலம் பெற்று நாடும் நலம் பெற புனிதரைப் பிரார்த்திப்போம்.

டாக்டர்.அ. பிறிற்ரோ
டக்ளஸ்
பாஷையூர்.

# வெளிநாடுகளிலிருந்து பரீட்சை எழுதும் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படும்

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)


வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் பிள்ளைகள், க.பொ. த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளை வெளிநாட்டிலேயே எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இவர்கள் இலங்கைத் தூதுவராலய காரியாலயத்தின் மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு பரீட்சை திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

க. பொ. த. சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சை சான்றிதழ்களை ஒன்லைன் மூலம் வழங்கும் முறையை பரீட்சைத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களத்தை நவீனமயப்படுத்துவதற்காக 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இத்திட்டம் அமுலுக்கு வரவுள்ளது. பரீட்சை சான்றிதழ்களை ஒன்லைன் மூலம் வெளியிடும் முறையை சில தசாப்தங்களுக்கு முன்னரே ஆரம்பித்திருக்க வேண்டும். பரீட்சை திணைக்களத்தின் டிஜிற்றல் மயப்படுத்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் தேவையான நிதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் இத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஹலீமின் அமைச்சுக்கு மத்தும பரிந்துரை



தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ஹலீம் இராஜினாமா செய்ததையடுத்து அவ்விடத்திற்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு பதில் அமைச்சராக ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது.

குறித்த யோசனை ஐக்கிய தேசிய கட்சியால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைக்கப்பட்டது. (இ-7)

# தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் இராஜினாமாவில் சந்தேகம்

## மனுஷ நாணயக்கார வெளிப்படுத்தல்



(காலி)

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் இராஜினாமா செய்தமை தொடர்பாக பல சந்தேகங்கள் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அரசியல் செல்வாக்கு காரணமாக அரச புலனாய்வுத் திணைக்களத் தலைவர் இராஜினாமா செய்துள்ளாரா? என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காலியில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உளவுத்துறையின் குறைபாடுகள் அல்லது பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்காதமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் காரணமாக பதவி விலகுவதாக அவர் அறிவித்திருந்தால் அது நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே இந்த இராஜினாமாவில் ஒருவரது தலையீடு அல்லது அரசியல் அழுத்தம் இருப்பதாக பெரும்பாலானவர்களிடம் தற்போது சந்தேகம் எழுந்துள்ளதாகவும் மனுஷ தெரிவித்தார்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளால் உளவுத் துறை சுயாதீனமாகச் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மனுஷ நாணயக்கார மேலும் சுட்டிக் காட்டினார். (இ-7)

# சஹ்ரான் ஒரு மிலேச்சத்தனமான கொலைகாரனாக மாறுவான் என நான் கனவிலும் நினைக்கவில்லை

## உலமா தலைவர் சாட்சியம்





(கொழும்பு)

எமக்கும் சஹ்ரானுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இருந்தன. ஆனால் சஹ்ரான் இவ்வாறு மிலேச்சத்தனமான கொலைகாரனாக மாறுவான் என நான் கனவிலும் நினைத்துப்பார்க்கவில்லை. இவன் குறித்தும் முறைப்பாடுகளை நாம் செய்துள்ளோம். ஆனால் நாம் வாய்திறக்காது இருக்க காரணம் உள்ளது. எமக்கு உயிரச்சுறுத்தல் உள்ளது. இவர்களின் அடிப்படைவாதச் செயற்பாடுகள் குறித்து தெரிவித்தும் எமக்கு எவரும் பாதுகாப்புத் தரவில்லை என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சார்பில் அதன் தலைவர் அஷ் ஷெய்க் எம்.ஐ.எம். ரிஸ்வி முப்தி தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.

எமக்கு எதிராகவும் எமது மதத்துக்கு எதிராகவும் மிகவும் கீழ்த்தரமான விமர்சனங்களை முன்வைத்து எம்மை நோகடித்து எமது மக்களை வேதனைப்படுத்துகின்ற மோசமான செயற்பாடுகள் நிறுத்தப்படும் வரையில் எவ்வாறு நீங்கள் கூறும் முஸ்லிம் அடிப்படைவாதம் முடிவுக்கு வரும்? இன்னும் எவ்வளவு காலத்துக்கு அவசரகாலச் சட்டத்தை கையாளப்போகின்றீர்கள் எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி பாராளுமன்றத்திற்கு அறிக்கை அளிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சார்பில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். ரிஸ்வி முப்தி மேலும் சாட்சியமளிக்கையில்,

ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன்தொடர்புபட்ட சஹ்ரான் அமைப்பினர் முதலில் என்னையே கொலை செய்ய வேண்டுமென்ற பிரசாரத்தை செய்து வந்தனர். நான் ஒரு காபிர் என்றும் நான் முஸ்லிம் அல்லாதவன் என்றும் நான் ஞானசார தேரருடன் தொடர்பில் உள்ளேன் என்றும் கருத்துக்களை பரப்பினர். தவறான புகைப்படங்களைப் புனைந்து என்னைத் தவறாக சித்திரித்தனர். எனினும் இது குறித்து நாம் பல தடவைகள் பாதுகாப்புத் தரப்புக்கு தெரிவித்தோம் அது மட்டுமல்ல சஹ்ரான் மற்றும் அவர் சார்ந்த குழுவின் செயற்பாடுகளை நாம் முஸ்லிம் செயற்பாடுகள் அல்ல என தெளிவாக கூறியுள்ளோம்.

தௌஹீத் ஜமாத் அமைப்பு தடைசெய்யப்பட வேண்டிய அமைப்பு என நாம் முன்பே கூறியிருந்தோம். இலங்கையிலுள்ள முஸ்லிம் அமைப்புக்கள் அனைத்தையும் வரவழைத்து ஒரு அமைப்பாக ஒரு கொள்கையின் கீழ் செயற்பட வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தினோம். அதில் தௌஹீத் ஜமாத் அமைப்பு இணங்கவில்லை. இவர்களுடன் மொத்தம் 12 அமைப்புகள் இணைந்து செயற்பட்டன. இவர்கள் இந்தியாவின் தமிழ் நாடு தௌஹீத் ஜமாத் அமைப்புடன் இணைந்து செயற்பட்ட அமைப்பினர்.

முஸ்லிம்கள் எவரும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் இணைந்து செயற்படும் நபர்கள் அல்லர். நாம் ஒருபோதும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பை ஆதரிக்கவில்லை. அவர்கள் எவரும் முஸ்லிம்கள் அல்ல. இலங்கையில் ஐ.எஸ். என கூறும் எவரும் இருப்பதாக நினைக்கவில்லை. இலங்கையில் இருந்து சிரியாவிற்கு சென்றதாக முப்பது, நாற்பது குடும்பங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. அவர்கள் மீண்டும் இலங்கைக்கு வந்ததாக கூறப்படுகின்றது. அவர்கள் தவிர்ந்து வேறு எவரும் இருப்பதாக தெரியவில்லை. எனினும் இவை அனைத்தையும் உரிய காரணத்துடன் தெரியப்படுத்தியுள்ளோம். இறுதியாக 2019-01-03ஆம் திகதி பாதுகாப்பு செயலாளரை சந்தித்து இறுவெட்டுக்கள், அறிக்கைகள் என சஹ்ரான் குறித்து அனைத்தையும் வழங்கியுள்ளேன்.

தினை தாக்குதலின் பின்னரே சஹ்ரான் தீவிர அடிப்படை வாதத்தை கையில் எடுத்துள்ளான் என்றே அறிய முடிகின்றது. சில சந்தர்ப்பங்களில் இந்து கடவுள் சிலைகள் சிலவற்றை அவர்களின் பள்ளிவாசலில் வைத்து முஸ்லிம் மாணவர்களுக்கு ஏனைய மதங்கள் குறித்து கருத்துக்களை கூறியுள்ளனர். இவர்கள் எவரும் முஸ்லிம் கொள்கை இல்லாதவர்கள் என்ற அடிப்படைவாத கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளன. எமக்கும் சஹ்ரானுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இருந்தன. ஆனால் சஹ்ரான் இவ்வாறு மிலேச்சத்தனமான கொலைகாரனாக மாறுவான் என நான் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. அதேபோல் முஹம்மத் ரம்சி என்ற நபரும் எமது கொள்கைக்கு முரணான ஒருவர் தான். இவனும் இந்தியாவின் தௌஹீத் ஜமாத் அமைப்புடன் சார்ந்த கொள்கைக்கே பயணித்தான். இவன் குறித்தும் முறைப்பாடுகளை நாம் செய்துள்ளோம். ஆனால் நாம் வாய்திறக்காது இருக்க காரணம் உள்ளது. எமக்கு உயிரச்சுறுத்தல் உள்ளது. இவர்களின் அடிப்படைவாதச் செயற்பாடுகள் குறித்து தெரிவித்தும் எமக்கு எவரும் பாதுகாப்புத் தரவில்லை. ஆகவே நாம் இது குறித்து கூறவேண்டியவற்றையும் கூறியுள்ளோம்.

எவ்வாறு இருப்பினும் நாம் இந்த நாட்டில் ஜனநாயக ரீதியில் வாழவே முயற்சித்து வருகின்றோம். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், இந்த நாட்டில் நாங்கள் தீவிரவாதிகள் அல்ல, நாம் ஜிஹாத் குறித்து என்ன கருதுகிறோம், ஜிஹாத் ஒருபோதும் தலிபான், அல்கொய்தா கொள்கை அல்ல என்ற காரணிகளைத் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றோம். ஆனால் நீங்கள் (தெரிவுக்குழு உறுப்பினர்களை நோக்கி கூறியது) எங்களை தொடர்ந்தும் நோகடித்து கீழ்த்தரமாக நடத்தி வருகின்றீர்கள். எமது கொள்கை, எமது மதம் அவமதிக்கப்பட்டு வருகின்றது. நாம் அடிப்படை வாதிகள் எனக்கூறி பௌத்த தேரர்களும் அரசியல் வாதிகளும் எமக்கு எதிராக செயற்படுவது எம்மை வேதனைப்படுத்தி வருகின்றது.

ரம்ழான் மாதத்தில் இரண்டாயிரம் முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஜிஹாத் புத்தகம் வைத்திருந்த குற்றத்தில் எமது முஸ்லிம் மக்கள் கைது செய்யப்படுகின்றனர். சுக்கான் சின்னம் பொறித்த உடை அணிந்த குற்றத்தில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். முகத்தை மூடி எச்சில் உமிழ முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவ்வாறு நீங்கள் நடந்துகொண்டால் எங்கே அடிப்படைவாதம் நிறுத்தப்படப் போகின்றது? முதலில் அரசாங்கம் உரிய சட்டங்களை சகலருக்கும் ஒரே மாதிரி பிரயோகிக்க வேண்டும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சகல சட்டத்தையும் ஆதரிக்க நாம் தயாராக உள்ளோம் இதனை நாம் வெளிப்படையாக தெரிவித்தும் விட்டோம். கடுமையான சட்டங்களைக்கொண்டு நாட்டைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது.

நிலைமைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விரைவில் எமது மக்கள் சுதந்தரமாக வாழ இடமளிக்க வேண்டும்.நான் ஒன்றை மட்டும் கேட்கின்றேன், இன்னும் எவ்வளவு காலத்துக்கு அவசர காலச் சட்டத்தைக் கையாளப் போகின்றீர்கள். எமது மக்களின் பாதுகாப்பு எமக்கு முக்கியம். ஐ.எஸ். தீவிரவாதம் என்பது இஸ்லாம் அல்ல. அவர்கள் எவரும் முஸ்லிம்களும் அல்ல. இதனை நீங்கள் தான் விளங்கிக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் சாட்சியமளித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 41

## விண்ணப்பித்து வருவதல்ல விருது

விருது விருது என
விழுந்தடிக்கும் உலகில்
விருதுகளை வாங்கிக் குவித்திட
ஐந்துநாள் பத்துநாள்
ஆன்மீகப் பேச்சிற்கு
பொன்னாடையுடன் புதுவிருது
பேசமுன்பு பேசியபடி
பேச்சு முடிந்தபின்
போடுகிறார் மாலையும் பொன்னாடையும்

கலைக்காய் வாழ்ந்து
கலையுடனே வாழ்ந்து
கலையை உயிர்மூச்சு என்போர்
நிறைகுடமாய் மிளிர்கிறார்

விருது வேண்டுமென்று
விண்ணப்பிக்கும் முறைமை
விருதுக்கோ, கலைஞர்க்கோ
அழகல்லவே
ஏனோ அதிகாரிகளுக்கு
இது புரியாததேனோ?

கலைஞனைத் தேடி வருவதே விருது
விண்ணப்பித்து வாங்கும் விருதை
வாங்கிலும் வாங்காது விடுவதே மேல் என்று
சினந்துகொண்டார்- ஒரு
மகா கலைஞன்

ஐயா!
வீட்டு அடுப்பில் பூனை கிடக்க
கலை கலை என
கலைக்காய் தன்னை அர்ப்பணித்த
கலைஞர்களை
விருதின்பின் அலையவிடாதீர்
அவர் விருப்பறிந்து வீடு சென்று
விருது கொடும்- இதுவே
கலைஞனுக்கான, கலைக்கான கௌரவம்

கலைஞரைத் தேடுங்கள்
தேடி அவர்களை நாடி
தரம் அறிந்து அவர் சேவை நலமறிந்து
கொடுங்கள் விருதை
அதுதான்
கலைஞர்க்கும் கலைக்கும் அழகு

மானவ. நா.கஜேந்திரன்

அன்பு வாசகர்களே!
இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# தெரிவுக்குழுவின் அதிகாரம் தெளிவுபடுத்த வேண்டும்

## வாசுதேவ வலியுறுத்து

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அதிகாரம் தொடர்பாக தெளிவுபடுத்துமாறு மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

அந்தவகையில் இது குறித்து ஒரு வாரத்திற்கு முன்னதாக சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு கடிதத்தை அனுப்பியதாக வாசுதேவ தெரிவித்தார்.

இருப்பினும் இந்த விடயம் தொடர்பாக எந்த பதிலும் வரவில்லை என்பதனால் மீண்டும் ஒரு கடிதத்தை கரு ஜெயசூரியவுக்கு அனுப்பியதாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

“எந்தவொரு நாடாளுமன்ற தெரிவுக்குழுவாக இருந்தாலும் அது நாடாளுமன்றத்தின் அதிகாரம் தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டும்.

இதன் ஊடாகவே மக்களின் பாதுகாப்பிற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் எந்தத் தீங்கும் ஏற்படாது என்பது உறுதிப்படுத்தப்படும். எனவே நாடாளுமன்றம் நாட்டிற்கு ஆபத்து இல்லாமல் புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும்.



அண்மைய சம்பவங்களுக்கு உண்மையான பொறுப்பு யார் என்பதை கண்டுபிடிப்பதற்கு எதிராக, எவரும் நிற்க முடியாது. இருப்பினும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முறையான பிரதிநிதித்துவத்தினாலேயே இதனை அடைய முடியும். ஆனால் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் மூலம் நீதியை அடைய முடியாது” என்றும் அவர் குற்றம் சாட்டினார். (இ-7)

# வவுனிக்குளத்தை புனரமைத்து தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வவுனிக்குளத்தின் மேலதிக அபிவிருத்திகளுக்குரிய நிதிகளை துறைசார் அமைச்சுக்களிடமிருந்து பெற்று குளத்தின் கீழான கட்டுமானங்களைப் புனரமைத்துத் தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் கடந்த 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புனரமைக்கப்பட்டதுடன் 24 அடிநீர் கொள்ளளவைக் கொண்டதாகக் காணப்பட்ட கொள்ளளவு மேலும் இரண்டு அடியால் உயர்த்தப்பட்டு குளம் முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குளம் புனரமைக்கப்பட்ட போதும், குளத்தின் கீழ் உள்ள நீர்விநியோக வாய்க்கால்கள், விவசாய வீதிகள், கழிவு வாய்க்கால்கள் என்பன புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் பயிர்ச்செய்கை காலங்களில் விவசாயிகள் விளைபொருட்களையும் விவசாய உள்ளீடுகளைக் கொண்டு செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளதுடன், குறித்த குளத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன வீதிகள் நீர் விநியோக வாய்க்கால்கள் என்பவற்றை புனரமைப்பதற்கான நிதிகளை உரிய திணைக்களங்கள் அமைச்சுக்களிடமிருந்து பெற்று மேற்படி புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துத் தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி குளத்தின் கீழ் 6060 ஏக்கர் நெற்செய்கை காணிகளும் 1200 ஏக்கர் வரையான ஏற்று நீர்ப்பாசனத்திட்டக் காணிகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-9-315)

## முல்லை.ஒட்டுசுட்டான் பகுதியில்

# பெருமளவில் அழிக்கப்படும் தேக்கு மரங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் முல்லைத்தீவு வீதியின் ஓரமாக தொடர்ச்சியாக தேக்கு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு மாவட்ட வனவளத் திணைக்களத்தின் அனுமதியுடன் குறித்த செயற்பாடு அரசமரக் கூட்டுத்தாபனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல்வேறு இடங்களில் இவ்வாறு தேக்கு மரச் சோலைகள் அழிக்கப்பட்டிருப்பினும் இதுவரை அந்த இடங்கள் வெட்டை வெளியாக காணப்படுகின்றது. அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய நிகழ்வில் ஜனாதிபதி முல்லைத்தீவு மாவட்டத்தில் 65 வீதமான வனப்பகுதி இருப்பதாகவும் இதனை பாதுகாக்குமாறும் மக்கள் மத்தியில் பெருமையாகக் கூறியிருந்தார். இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் குறித்த மரங்களுக்கான தேவை இல்லாதபோதும் தொடர்ச்சியாக இவ்வாறு தேக்கு மரங்கள் அழிக்கப்பட்டு ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள அரசமர கூட்டுத்தாபன வளாகத்துக்கு கொண்டு வரப்பட்டு தொடர்ச்சியாக வெளிமாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரவல் அகழ்வு, மணல் அகழ்வு, கருங்கல் அகழ்வு உள்ளிட்ட செயற்பாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான மரங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதை அவதானித்து வருகின்ற முல்லைத்தீவு மாவட்டம், திணைக்களம் எதற்காக தொடர்ச்சியாக மரங்களை அழித்து வருகிறது என்பது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் நேற்றும் குறித்த மரம் அறுக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வந்த நிலையில் குறித்த பகுதியில் நடைபெறுகின்ற செயற்பாட்டை செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை அரச மர கூட்டுத்தாபன அதிகாரிகள் எதற்காக இதை படம் எடுக்கிறீர்கள் என்றும் ஊடகவியலாளரை தங்களுடைய கைத்தொலைபேசியில் ஒளிப்படம் மற்றும் வீடியோ எடுத்தும் அச்சுறுத்தல் விடுக்கும் விதமாக செயற்பட்டனர். அத்தோடு குறித்த இடத்தில் சிங்கள மொழியிலே ஒரு பதாகையை போட்டுவிட்டு அதிலேயே விடயங்கள் அனைத்தும் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவித்தனர். முற்றுமுழுதாக தமிழர்கள் வாழ்ந்து வரும் பகுதியிலே சிங்கள மொழியிலேயே ஒரு பதாகையை போட்டுவிட்டு தங்களுடைய இந்தப் பணியை செய்து கொண்டிருக்கின்ற அரச மரக் கூட்டுத்தாபனத்தின் இந்த செயற்பாடானது அவர்கள் இதில் ஏதாவது சட்ட விரோதமான வேலை செய்கிறார்களா? என்று எண்ணத் தோன்றுகின்றது என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறான தேவைகள் முல்லைத்தீவு மாவட் டத்தில் இல்லாத நிலையில் இவர்களுடைய இந்தச் செயற்பாடு பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் இவ்வாறான நிகழ்வுகளை தடுப்பதற்காக உழைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மாவட்டத்தில் தேவையில்லாத போது மாவட்டத்தில் மரங்கள் அறுக்கப்படுவது ஒருபுறமாக இடம்பெற ஏன் பல இலட்சம் ரூபாய்களை செலவு செய்து மர நடுகை செய்ய வேண்டும் இவ்வாறு மரங்கள் அறுப்பதை தடுக்கலாம் என மக்கள் விசனம் தெரிவித்தனர். (7-9-281)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இலவச தொழில் பயிற்சி நிலையம் திறப்பு



(பரந்தன்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இலவச தொழில் பயிற்சி நிறுவனமான புதிய வாழ்வு நிறுவனம் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரனால் நேற்று கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. புதிய வாழ்வு நிறுவன இயக்குநர் அந்தோனிப்பிள்ளை றொபட் கிளின்ரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட பதில் நீதவான் அன்ரன் புனிதநாயகம்,விவசாயத் திணைக்களம் பிரதி மாகாணப் பணிப்பாளர் திருமதி. ஸகிலாபானு, மக்கள் நலன் காப்பக வெளிக்கள உத்தியோகத்தர் விஜயானந்தன், உறங்கா விழிகள் நிறுவனத்தின் பொறுப்பாளர் விமலநாதன் மயில்வாகனம், ஐரோப்பிய தமிழ் ஆய்வியல் மகாநாட்டு பிரதிநிதி ரமேஸ்வரன் (தமிழ்வளர்ச் செல்வன்) உட்பட பலர் கலந்து கொண்டனர். (7-9-312)




# ஜனநாயக போராட்டத்தின் போது அச்சுறுத்தல் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விசாரணை

ஊடகவியலாளர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மீது கடற்படையினரின் அச்சுறுத்தல் மேற்கொண்டமை தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் விசாரணை இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சித்திரை மாதம் 7 ஆம் திகதி நடைபெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய போராட்டத்தின்போது செல்வபுரம் பகுதியில் பேருந்து தரிப்பிடத்தில் ஒளிந்திருந்து புகைப்படம் வீடியோ எடுத்து அச்சுறுத்திய கடற்படை வீரர் தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நேற்று முன்தினம் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெற்றன. குறித்த விசாரணைகளின் போது கடற்படையினர் குறித்த காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு தங்களால் எந்தவிதமான அச்சுறுத்தலும் இனிவரும் காலங்களில் வழங்கப்படாது என தெரிவித்த உறுதிமொழியையடுத்து அவர்களுடைய அந்தப் பிரச்சினை சுமுகமாக இரண்டு தரப்பினராலும் தீர்க்கப்பட்டது. அத்துடன் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த முறைப்பாட்டில் பொலிஸார் திட்டமிட்டு அநீதி விளைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான அனைத்து சாட்சியங்களையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் அது தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (7-9-281-250)

# கௌதாரிமுனை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி கௌதாரி முனைக்கான 18 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படாமையினால் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கௌதாரிமுனை பரமன்கிராய் மன்னித்தலை போன்ற பகுதிகளுக்குச் செல்கின்ற பிரதான வீதி இதுவரை காலமும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதாவது, கௌதாரிமுனைக் கிராமத்திலுள்ள 119 குடும்பங்களும் பரமன்கிராய் பகுதியில் வாழும் 160 குடும்பங்களும் எந்த அடிப்படைத் தேவைகளுக்கும் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் வீதி புனரமைக்கப்படாமை, போக்குவரத்து வசதி என்பவற்றால் அன்றாடம் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே குறித்த வீதியைப் புனரமைத்துத்தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-9-315)

# மன்னார் பேசாலை பிரதேச வைத்தியசாலையில் ஆரம்ப சுகாதார வலுவூட்டல் திட்டம் ஆரம்பிப்பு



ஆரம்ப சுகாதார வலுவூட்டல் திட்டத்திற்காக மன்னார் மாவட்டத்தில் பேசாலை மற்றும் அடம்பன் வைத்தியசாலைகள் தெரிவாகியுள்ள நிலையில் குறித்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பேசாலை பிரதேச வைத்திய சாலையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார வலுவூட்டல் அபிவிருத்தித் திட்டத்திற்காக 35 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த வேலைத்திட்டம் பேசாலை பிரதேச வைத்திய சாலையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சினுடைய குறித்த அபிவிருத்தித் திட்டத்தில் வெளி நோயாளர் பகுதி கணனி மயமாக்கல், ஆய்வு கூடங்கள், பரிசோதனைகள் எனப் பல்வேறு வசதிகளுடன் 5 ஆண்டுத்திட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரீ.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன் றாஸ், மன்னார் உதவி பிரதேச செயலாளர் சிவசம்பு கனகாம்பிகை, மாகாண சுகாதார அதிகாரிகள் மற்றும் வைத்தியர்கள், வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டனர். (7-9-285)

# வவு.கணேசபுரம் வீட்டுத்திட்ட பிரச்சினை குறித்து ஆராய்வு



(குருமன்காடு)

வவுனியா, கணேசபுரம் கிராமத்தில் வீட்டுத்திட்டம் கிடைக்காதவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் நிலைமைகளை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் பார்வையிட்டு அவர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

வவுனியா கணேசபுரத்தை சேர்ந்த சுமார் இருபதுக்கு மேற்பட்டவர்கள் கடந்த திங்கட்கிழமை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது குறித்த இடத்திற்கு வருகைதந்த வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் கோரிக்கைகளை கேட்டறிந்ததோடு அதிகாரிகளுடனும் தொலைபேசி மூலமாக கலந்துரையாடியிருந்தார்.

இந்நிலையில், குறித்த கிராமமான கணேசபுரத்திற்கு சென்ற அவர் வீட்டுத்திட்டம் வழங்கப்படாதவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுடைய குடும்ப நிலைமைகள் தொடர்பாகவும் ஆராய்ந்திருந்தார்.

அத்துடன், அம்மக்களுக்கு சமுர்த்தித் திட்டம் வழங்கப்படாமை, அவர்களுடைய கிராம வீதிகள் தொடர்பாகவும் கேட்டறிந்ததோடு குறித்த இடத்தில் இருந்து அராசாங்க அதிபருடன் தொலைபேசி தொடர்பை மேற்கொண்டு அம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக தெரியப்படுத்தியிருந்தார். (7-9-250)




# 12 மாதிரி கிராம வீட்டுத்திட்டங்களுக்கு மன்னாரில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(மன்னார்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாதிரிக் கிராம வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமையாளர் செல்வராஜ் குலாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட மன்னார் தொடக்கம் தலைமன்னார் வரையில் சுமார் 12 மாதிரி கிராம வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.



இதில் 12 மாதிரிக் கிராமங்களில் 322 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச சபை தவிசாளர் எம். முஜாகீர் மற்றும் உறுப்பினர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (7-9-285)

# யானைவேலி அமைக்கும் பணிகள் இடைநிறுத்தம்

## உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த யானைவேலி அமைக்கும் பணிகள் வனவளத்திணைக்கத்தினால் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கவிருப்பதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விசுவமடு பிரதேசத்தில் ஏற்படும் காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்கான யானை வேலி அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதி செயலகத்தில் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 22 கிலோமீற்றர் நீளமான யானை வேலிகளை அமைப்பதற்கான நிதியொதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

கல்மடுக்குளத்திலிருந்து இடைக்கட்டுக்குளம் வரையான பகுதிகளில் உள்ள விவசாயிகளின் விவசாயச் செய்கைகளைப் பாதுகாப்பதற்கும் காட்டுயானைகள் ஊர் மனைகளுக்குள்ளும் வருவதைத்தடுப்பதற்கும் ஏற்ற வகையில் முன்னெடுக்கப்பட்டு வந்த யானை வேலி அமைக்கும் பணி கடந்த வாரம் வனவளத்திணைக்களத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டஅரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனை தொடர்பு கொண்டு கேட்டபோது, முல்லைத்தீவு விசுவமடுப்பிரதேசத்தில் 22 கிலோமீற்றர் நீளமான யானை வேலிகள் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வந்தது.

குறித்த வேலைகள் இடம்பெறும் பகுதி வனவளத்திணைக்களத்திற்கு சொந்தமான பகுதியென அவர்கள் தெரிவித்து இதனை நிறுத்தியிருக்கின்றார்கள். நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு உரிய அதிகாரிகளுடன் கள விஜயத்தினை மேற்கொண்டு அவற்றை பார்வையிட்டிருக்கின்றோம்.

இது தொடரபில் மேலதிக நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்கவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

குறித்த களவிஜயத்தின் போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மற்றும் வனவளத் திணைக்கள மாவட்ட அதிகாரி, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (7-9-315)

# மாணவர்களிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கலந்துரையாடல்





(மன்னார்)

மாணவர்கள் மத்தியில் இன ரீதியான ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல் எனும் தொனிப்பொருளில் நிலைமாறு கால நீதி தொடர்பான கருத்துப் பரிமாற்ற நிகழ்வு நேற்று முன்தினம் மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

தேசிய சமாதானப் பேரவை ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்த சூழ்நிலை மற்றும் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் இன,மத முறுகல் தொடர்பான வெளிப்படையான கலந்துரையாடல் மூலம் மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்கள், மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சாங்க ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன் நிகழ்வில் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். (7-9-285)

# இளைஞனின் சடலம் மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு செம்மலை கிழக்குப் பகுதியில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலத்தை முல்லைத்தீவு பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

செம்மலை கிழக்கு பகுதியை சேர்ந்த ஆரோக்கியநாதர் கபிலன் (வயது-19) என்ற இளைஞரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரின் வீட்டுக்கு அருகில் உள்ள களப்பு ஒன்றின் அருகில் உள்ள மரத்தில் தூக்கில் தொங்கியவாறு குறித்த இளைஞரின் சடலம் இருப்பதை கண்ட அப்பகுதி சிறுவன் ஒருவர் உயிரிழந்த இளைஞரின் வீட்டாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக உடலத்தை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து சென்றுள்ளனர்.

குறித்த இளைஞரின் சகோதரன் ஒருவரும் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் இதே இடத்தில் சடலமாக மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-9-281)

# முள்ளிவாய்க்கால் மீனவர்களின் வலையில் அகப்பட்ட திமிங்கலம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கடல் கரைப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை கரைவலை தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுடைய வலையில் திமிங்கலம் ஒன்று அகப்பட்டு கரை ஒதுங்கியுள்ளது.

அப்போது குறித்த திமிங்கலத்தை மீனவர்கள் வலையில் இருந்து அகற்றி பாதுகாப்பாக மீண்டும் கடலில் விட்டுள்ளனர். (7-9-281)

# இருதய வைத்திய நிபுணர் கடமைகள் பொறுப்பேற்பு

இருதய வைத்திய நிபுணர் பானு தில்லையம்பலம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் யாழ்.பல்கலைக்கழக MBBS பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் MD இனை முடித்து வெளிநாட்டில் மேலதிக பயிற்சியை முடித்து இரண்டு வாரங்களின் முன் நாடு திரும்பியிருந்தார்.

இவருக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வைத்தியசாலை பணிப்பாளர் வழங்க உறுதியளித்துள்ளார். (7-9)




# காணாமல் போன இந்திய விமானம் சிதைந்த நிலையில் கண்டுபிடிப்பு

காணாமல் போன இந்திய விமானப்படை விமானம் அருணாசல பிரதேசத்தில் சிதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் குறித்த விமானத்தில் பயணம் மேற்கொண்ட பயணிகள் குறித்த எந்தவொரு தகவலும் இன்னும் வெளியாகவில்லை.

கடந்த 4 ஆம் திகதி, 13 பேருடன் காணாமல் போன இந்திய விமானப்படை விமானத்தை தேடும் பணி 9 ஆவது நாளாக நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது எம்.ஐ.17 ரக ஹெலிகொப்டரின் உதவியுடன் விமானப்படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தபோதே ஏ.என்.32 ரக விமானம் சிதைந்த நிலையில் கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய விமானப்படை தகவல்கள் தெரிவிப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அசாம் மாநிலம்- ஜோர்கத் விமானப்படை தளத்திலிருந்து அருணாச்சல பிரதேசத்தின் மெஞ்சுகா பகுதியை நோக்கி புறப்பட்டுச் சென்ற இந்திய விமானப்படையின் ஏ.என்-32 ரக விமானம், கடந்த 4 ஆம் திகதி, 13 பேருடன் காணாமல் போனது.

இந்நிலையில் காணாமல் போன விமானம் குறித்து எந்தவொரு தகவலும் இதுவரை கிடைக்கப்பெறாத நிலையில், இராணுவம் மற்றும் இந்தோ- திபெத் பாதுகாப்பு படையினர் நேற்று வரை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் மாயமான விமானத்தை கண்டறிய இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ முன்வந்து, அதனுடைய ரிசார்ட் வகை செயற்கைக் கோள்களின் ஊடாக விமானத்தை தேடும் பணி முன்னெடுக்கப்பட்டது.

ஆனாலும் தேடுதல் பணியில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாதமையினால், விமான ஆராய்ச்சி மையத்தின் 5000 கண்காணிப்பு விமானங்கள் மற்றும் NTRO உளவு செயற்கைக்கோள்கள் ஆகியவற்றின் உதவியுடன் தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே குறித்த விமானம் சிதைவடைந்த நிலையில் அருணாசல பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஹொங்கொங்கில் வ...

# ஆர்ப்பாட்டக்காரர்க...

# கண்ணீர்ப்புகை, நீர்த்...



(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் அரச அலுவலகங்களை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

முகங்களை மூடியவாறு தலைக்கவசம் அணிந்தவர்கள் அரச அலுவலகங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்காக, சந்தேகநபர்களை சீனாவிற்கு அனுப்பும் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டங்கள் தொடர்ச்

# சுற்றுலாத் தலமாக மாறிய உலகின் மிக உயர்ந்த அஞ்சலகம்



இந்தியாவில் உள்ள உலகிலேயே மிக உயர்ந்த அஞ்சலலுவகத்தைச் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கின்றனர்.

இமாச்சல பிரதேசத்தின் ஹிக்கிம் கிராமம் அதிக மலைகளை கொண்ட, சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்லும் இடமாகும். இப்பகுதியில் 14 ஆயிரத்து 567 அடி உயர மலையின் உச்சியில் அஞ்சலகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இந்த அஞ்சலகம் தான் உலகிலேயே மிக உயரிய அஞ்சலகம் எனும் பெருமையைக் கொண்டுள்ளது. இந்த அஞ்சலகத்தை காண உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் சென்ற வண்ணம் உள்ளனர்.

1983 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இந்த அஞ்சலகத்தில் ரின்சென் செர்ரிங் என்பவர் தபாலதிபராக பணியாற்றி வருகிறார். இந்த பயணத்தின் நினைவாக அஞ்சலகத்தில் விற்கப்படும் முத்திரைகளை சுற்றுலாப் பயணிகள் வாங்கிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# ட்ரம்ப்- மெக்ரானின் நட்புமரம் பட்டுப்போனது

வெள்ளை மாளிகையில் ட்ரம்ப், மெக்ரான் இணைந்து நட்ட 'நட்பு மரம்' பட்டுப்போய் விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. முறையான பராமரிப்பின்மையே மரக்கன்று பட்டுப்போனதற்கான காரணமாகும்.

பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரான், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றார். அப்போது அவர் முதலாம் உலகப் போரின் போது பிரான்சில் இறந்த அமெரிக்கர்களின் கல்லறையிலிருந்து ஓக் மரக்கன்றை அமெரிக்காவுக்கு எடுத்துச் சென்றார்.

இதையடுத்து இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவை வெளிப்படுத்தும் விதமாக, அந்த ஓக் மரக்கன்றை மெக்ரான், ட்ரம்புக்கு பரிசாக வழங்கினார். அதன் பின்னர் ட்ரம்ப் மற்றும் மெக்ரான்

# பாகிஸ்தான் வழியாக மோடி விமானம் பறக்கலாம்

## இம்ரான்கான் அரசு ஒப்புதல்

(லாகூர்)

கிர்கிஸ்தான் நாட்டில் நடக்க உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்க செல்லும் பிரதமர் மோடியின் விமானம், பாகிஸ்தான் வழியாக பறக்க இம்ரான்கான் அரசு ஒப்புதல் அளித்தது.

கிர்கிஸ்தான் நாட்டின் தலைநகரான பிஷ்கேக் நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு, இன்று ஆரம்பமாகி நாளை 14 ஆம் திகதி முடியும்.

இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளவுள்ளார். அவர் இந்த மாநாட்டின் இடையே ரஷ்ய ஜனாதிபதி புடின், சீன ஜனாதிபதி ஜின்பிங் உள்ளிட்ட தலைவர்களை சந்திக்கவுள்ளார். இதற்காக பாகிஸ்தான் வழியாகச் செல்ல அவர் திட்டமிட்டுள்ளார்.

ஆனால் கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி நடந்த புல்வாமா தாக்குதலுக்கு பதிலடி தருகிற வகையில், இந்திய போர் விமானங்கள் பெப்ரவரி 26 ஆம் திகதி பாகிஸ்தான் சென்று பயங்கரவாதிகள் முகாம்களை லேசர் குண்டுகள் போட்டு துவம்சம் செய்ததைத் தொடர்ந்து, பாகிஸ்தான் வான்வெளியை அந்த நாட்டின் இம்ரான்கான் அரசு மூடி வைத்துள்ளது.

இந்த நிலையில் பிரதமர் மோடியின் விமானம் பாகிஸ்தான் வழியாக பறக்க அனுமதிக்க வேண்டும் என்று இந்திய அரசின் சார்பில் இம்ரான்கான் அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதைப் பரிசீலித்த இம்ரான்கான் அரசு, மோடியின் விமானம் பாகிஸ்தான் வழியாக பறக்க கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இதை பாகிஸ்தான் உயர் அதிகாரி ஒருவர் நேற்று உறுதி செய்தார். (7)

# சீனாவில் ...

# 16 பேர் உ...

- 1300 வீடுகள் சே...
- 17 ஆயிரம் பேர் ...

(பீஜிங்)

சீனாவில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மழை தொடர்பான விபத்துகளில் சிக்கி 16 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

சீனாவின் தெற்குப் பகுதியில் கடந்த ஒரு வாரகாலமாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, தாழ்வான



# வெளிநாடு

## ...வலுக்கும் போராட்டம்

# ...கள் மீது பொலிஸார் ...ர்த்தாரைப் பிரயோகம்



சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் போராட்டங்களில் பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் இணைந்து கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்டங்கள் காரணமாக குறித்த சட்டமூலம் மீதான இரண்டாவது வாக்கெடுப்பு தாமதமடைந்தது.

இந்நிலையில் நூற்றுக்கணக்கான ஆயுதமேந்திய கலகமடக்கும் பொலிஸார் அவர்களை கலைக்க நீர்த்தாரைப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைத் தாக்குதலும் நடத்தியுள்ளனர். (7)



ஆகிய இருவரும் இணைந்து வெள்ளை மாளிகை பகுதியில் ஓக் மரக் கன்றை நட்டனர். இதனால் இது நட்பு மரம் என அழைக்கப்பட்டு, உலகெங்கிலும் கவனத்தை ஈர்த்து வந்தது.

இந்த நிலையில் அந்த ஓக் மரக்கன்று பட்டுப்போய் விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (7)

# ...ல் கனமழை ...உயிரிழப்பு

## ...ர சேதம் ...பேர் வெளியேற்றம்

பகுதிகள் தண்ணீரில் மூழ்கி உள்ளன. வீதிகள், வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

குவாங்சி ஜுவாங் தன்னாட்சி பிராந்தியத்துக்கு உட்பட்ட 6 நகரங்கள் மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளத்தினால் 1300 வீடுகள் சேதமடைந்துள்ளன. 17 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். (7)



# ஜின்பிங் என்னை சந்திக்க மறுத்தால் சீனப்பொருட்களுக்கு கூடுதல் வரி

## ட்ரம்ப் பகிரங்க மிரட்டல்



(பீஜிங்)

ஜப்பானில் நடைபெறும் ஜி-20 மாநாட்டின் இடையே ஜின்பிங் தன்னைச் சந்தித்து பேசத் தவறினால் சீனப் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

சீனப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை 10 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உயர்த்தினார். அதற்கு பதிலடியாக சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்குக் கூடுதல் வரி விதித்தது.

அதனைத்தொடர்ந்து. இரு நாடுகளும் மாறி.மாறி இறக்குமதிப் பொருட்களுக்கான வரியை கணிசமாக உயர்த்தியதால் உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளுக்கு இடையே வர்த்தகப்போர் உருவானது.

இதற்கிடையில் கடந்த ஆண்டு இறுதியில் ஆர்ஜென்டீனாவில் நடந்த ஜி-20 மாநாட்டின் இடையே அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும் சீன ஜனாதிபதி ஜின்பிங்கும் சந்தித்து வர்த்தகப்போர் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதன்பின்னர் இரு நாடுகள் இடையிலான வர்த்தகப்போர் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டு, நிரந்தர தீர்வுகாண இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தை ஆரம்பமானது. ஆனால் பல்வேறு கட்டங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதனால் சீனாவில் இருந்து இறக்குமதியாகும் 200 பில்லியன் டொலர் (இந்திய மதிப்பில் ரூ.13 இலட்சத்து 84 ஆயிரத்து 950 கோடி) மதிப்புடைய பொருட்களுக்கான வரியை 25 சதவீதமாக அமெரிக்கா கடந்த மாதம் உயர்த்தியது. அதற்குப் பதிலடியாக சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை கணிசமாக அதிகரித்தது.

இதன்காரணமாக இரு நாடுகள் இடையிலான வர்த்தகப் போர் உச்சத்தை எட்டி இருக்கிறது. இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து பேசி, ஒருமித்த கருத்துடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினால் மட்டுமே வர்த்தகப்போர் முடிவுக்கு வரும் என்கிற சூழல் உருவாகி உள்ளது.

இந்த நிலையில் ஜப்பானின் ஒசாக்கா நகரில் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறும் ஜி-20 மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும் சீன ஜனாதிபதி ஜின்பிங்கும் கலந்துகொள்கிறார்கள்.

இந்த மாநாட்டுக்கு இடையில் இருநாட்டு தலைவர்கள் சந்தித்து பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், ஜி-20 மாநாட்டின் போது ஜின்பிங் தன்னை சந்திக்காவிட்டால், 300 பில்லியன் டொலர் (ரூ.20 இலட்சம் கோடி) மதிப்புடைய சீனப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை 25 சதவீதமாக உயர்த்துவேன் என ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், "ஜின்பிங் என்னை சந்திக்கத் தயாராக இருப்பார் என நினைக்கிறேன்.

அவர் அதற்கு தயாராக இல்லை என்றால் நான் ஆச்சரியப்படுவேன். நாங்கள் இருவரும் சந்தித்து பேசுவது சரியாக நடக்க வேண்டும் என விரும்புகிறேன்" எனத் தெரிவித்தார்.

மேலும் அவர், "ஜி-20 மாநாட்டின் இடையே ஜின்பிங் என்னைச் சந்திக்க தவறிவிட்டால், 300 பில்லியன் டொலர் மதிப்புடைய சீன பொருட்களுக்கான இறக்குமதி வரி நிச்சயமாக உயர்த்தப்படும்" எனத் தெரிவித்தார். (7)

# ஆப்கானில் தலிபான்களின் பிடியிலிருந்து பாதுகாப்புப்படையினர் உட்பட 34 பேர் மீட்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் பிடியிலிருந்து இராணுவ வீரர்கள் உட்பட 34 பேர் மீட்கப்பட்டதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகள், அரசப் படைகளுக்கு எதிராக அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். பாதுகாப்புப் படைகளுக்கு உளவு பார்ப்பதாக கூறி பொதுமக்களையும் சிறைப் பிடித்து துன்புறுத்துகின்றனர். இதனைத் தொடர்ந்து தலிபான் பயங்கரவாதிகள் வசமுள்ள பகுதிகளை மீட்க வான்வழி மற்றும் தரைவழி மார்க்கமாக இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.



இந்நிலையில் தலிபான் பயங்கரவாதிகள் பிடியிலிருந்து இராணுவ வீரர்கள் உட்பட 34 பேர் மீட்கப்பட்டதாக ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்தியில் கூறியதாவது,


ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டையின் ஒரு பகுதியாக கடந்த திங்கட்கிழமை (ஜூன் 10) பஹ்லான் மாகாணத்தில் இராணுவம் அதிரடி தேடுதல் வேட்டையினை மேற்கொண்டது. அந்த தேடுதல் வேட்டையின் போது பயங்கரவாதிகளால் சிறைபிடிக்கப்பட்ட 34 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட 34 பேரில் 17 பேர் பொதுமக்கள் எனவும் எஞ்சிய 17 பேர் உளவுத்துறை மற்றும் பாதுகாப்புப் படையை சேர்ந்தவர்கள் ஆவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

'எங்கள் தேசங்கள் அழிக்கப்படும்'

# தமிழக தௌஹீத் ஜமாத்தால் மிக மோசமான பாதிப்பு!

## பேராசிரியர் ரொஹான் சுட்டிக்காட்டு

**(சிங்கப்பூர்சிற்றி)** **இலங்கையில் தீவிரவாதக் குழுக்கள் உருவாவதற்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த தீவிரவாதப் போதகர்களின் செல்வாக்கு முக்கிய காரணம். தமிழ் நாட்டைச் சேர்ந்த தௌஹீத் ஜமாத்தின் நடவடிக்கைகள் இலங்கைக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேராசிரியர் ரொஹான் குணரட்ன சுட்டிக்காட்டினார்.**



இந்துஸ்தான் டைம்ஸின் பத்மா ராவே சுந்தர்ஜிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து சிரியாவிற்கும் ஈரானிற்கும் சென்று ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புடன் இணைந்து கொண்ட முதல் இலங்கைப் பிரஜை முஹமட் நிலாம். அவர் 2015 இல் கொல்லப்பட்டார். இவர் கண்டி திரித்துவ கல்லூரியின் பழைய மாணவர்.

அவர் ஆறு மாதங்கள் மத்ரஸாவில் கல்வி பயின்றார். ஆனால் பல்கலைக்கழகக் கல்வியை விரும்பி பாகிஸ்தானிலுள்ள சர்வதேச இஸ்லாமிய கல்லூரியில் இணைந்து பட்டம் பெற்றார்.

இலங்கையில் தீவிரவாதக் குழுக்கள் உருவாவதற்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த தீவிரவாத போதகர்களின் செல்வாக்கு முக்கிய காரணம்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த தௌஹீத் ஜமாத்தின் நடவடிக்கைகள் இலங்கைக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பு ஆசியாவில் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதால் அரச தலைவர்களும் மதத் தலைவர்களும் மாதத்திற்கு ஒரு முறையாவது சந்தித்து நிலவரம் குறித்து ஆராய வேண்டும்.

ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் கொள்கை பரவுவதன் காரணமாக எங்கள் தேசங்கள் அடுத்த ஐந்து வருடங்களில் அழிக்கப்பட்டுவிடும்.

முஸ்லிம்கள் எங்கள் பிராந்தியத்தில் பின்பற்றி வருகின்ற பாரம்பரிய இஸ்லாமிய கலாசாரத்திற்கு வெளிநாட்டுக் கொள்கைகளால் ஆபத்து என்பதை ஆராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன. இலங்கையின் ஐ.எஸ். அமைப்பிற்கு பாகிஸ்தானுடன் தொடர்பில்லை. இவர்களுக்கு இந்தியாவுடனும் மத்திய கிழக்குடனும் தொடர்புகள் உள்ளன.

நிதி திரட்டுவது மற்றும் பயிற்சிகள் இலங்கையிலேயே இடம் பெற்றன. வனாத்தவில்லு நுவரெலியா, அம்பாந்தோட்டை உட்பட பல பகுதிகளில் ஐ.எஸ். அமைப்பினர் முகாம்களை உருவாக்கினர். குண்டு தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை இவர்கள் இணையங்கள் மூலம் பெற்றனர். குண்டுகளைத் தயாரித்த முஹமட் ஹஸ்தூன் மிகத் திறமையான இளைஞன். இவனை சஹ்ரான் தீவிரவாத மயப்படுத்தி தன்னுடன் இணைத்துக் கொண்டான்.

இவனின் மனைவி புலத்சினி. இந்துப்பெண்ணான இவள் இஸ்லாமிய மதத்திற்கு மாறினாள். இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள்.

தென்னாசியாவிற்கான ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் கிளையான ஐ.எஸ். கொராசன் 2015 இல் உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பு அதன் பின்னர் இலங்கை உட்பட நான்கு நாடுகளில் தனது கிளையை ஏற்படுத்தியது. ஐ.எஸ். அமைப்பு பிராந்தியங்களில் தனது கிளையை ஏற்படுத்த விரும்புகின்றது. இந்தக் கிளைகள் பிராந்திய நாடுகளுக்கு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தப் போகின்றன.

பிராந்திய அரசாங்கங்கள் ஐ.எஸ். அமைப்பை சிறிதளவும் அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை உருவாக்குவதுடன் அந்த அமைப்பால் ஏற்படும் ஆபத்துகளை எதிர்கொள்வதற்காக கூட்டாகச் செயற்பட வேண்டும்.

இலங்கையின் அமைப்பு இந்தக் கிளைகளுடன் சைபர் தொடர்புகளை கொண்டுள்ளன என ரொஹான் குணரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

மக்களின் எதிர்பார்ப்பு ஜனாதிபதித் தேர்தலே

# மாகாணத் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கும் ஐ.தே.கவுக்கும் எந்தத் தொடர்புமில்லை

## அஜித் பெரேரா விளக்கம்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கும் தேர்தல் ஆணைக்குவின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் தேர்தல் ஆணையகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தற்போது மாகாண சபைக்கு பொறுப்பான அமைச்சு ஐக்கிய தேசியக் கட்சியிடம் உள்ளது. தேர்தலை விரைவாக நடத்த அனைத்து நடவடிக்கைகளும் முறையாக இடம்பெறுகின்றன. ஒரு தரப்பினரின் அவசரத்திற்கு இணங்க நெருக்கடிகளுக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் அவை மறுபுறம் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

நாட்டு மக்கள் இன்று ஜனாதிபதித் தேர்தலையே எதிர்பார்த்துள்ளார்கள். இத்தேர்தலின் ஊடாகவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உருவமும் உள்ளமும்

ஒரு முனிவர் காட்டிலே தவம் செய்து கொண்டிருந்தார். ரொம்ப நாளாக அப்படியே உட்கார்ந்திருந்தார். அவருக்கு ஒரு சக்தி வந்து விட்டது. அதன் பின் லேசாக கண்களைத் திறந்து பார்த்தார். அவர் கண்ணுக்கு முன்னால் ஒரு எலி பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது. இந்த எலி ஏன் இப்படி பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றது என்று யோசித்தார். உடனே அதற்கான காரணத்தையும் கண்டு பிடித்தார்.

அவருக்குப் பின்னால் ஒரு பூனை நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்துத் தான் இந்த எலி நடுங்குகின்றது. உடனே அந்த எலிக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தார். தன்னுடைய தவ வலிமையை உபயோகப்படுத்தினார். அந்த எலியை ஒரு பூனையாக மாற்றினார். இனிமேல் அந்த எலி பூனைக்காக பயப்பட வேண்டியதில்லை. அதுதான் அவருடைய எண்ணம். இப்படி செய்து விட்டு அந்த முனிவர் கண்களை மூடி விட்டார். மறு நாள் காலையில் லேசாக கண்களைத் திறந்து பார்த்தார். நேற்று ஒரு எலியை பூனையாக மாற்றினாரே... அந்தப் பூனை இப்ப பயந்து நடுங்கிக் கொண்டே இருந்தது.

இன்னும் ஏன் நடுங்குகின்றது என்று பார்த்தார். பின்னால் ஒரு நாய் நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்துத்தானே இது நடுங்குது. இப்ப இதையும் ஒரு நாயாக மாற்றி விட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமே! என்று நினைத்தார். அதேபோல் செய்தும் விட்டார். மறுபடியும் மறுநாள் கண்களைத் திறந்து பார்த்தார். இப்ப அந்த நாயும் நடுங்கிக் கொண்டே நின்று கொண்டிருந்தது. அதற்குக் காரணம் முனிவரின் முதுகிற்குப் பின்னால் நின்று கொண்டிருந்தது நரி. சரி! நம்மிடம் தான் தவ வலிமை இருக்கே. இந்த நாயையும் நரியாக்கி பார்த்து விடுவோமே! என்று நினைத்தார். அதேமாதிரி ஆக்கினார். நாயாக இருந்தது நரியாக மாறியதனால் இனியாவது அது நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தார். அந்த நம்பிக்கையும் நீடிக்கவில்லை.

அந்த நரியும் நடுங்க ஆரம்பித்து விட்டது. என்னவென்று பார்த்தால் பின்னால் ஒரு புலி நின்று கொண்டிருந்தது.

முனிவர் சளைக்கவில்லை. நரியைப் புலியாக்கினார். இப்ப அவர் மனதிற்குள்ளே ஒரு நிம்மதி. அப்பாடா புலியை பயமுறுத்துகின்ற அளவிற்கு இன்னொரு மிருகம் வரப்போவதில்லை. அதனால் பிரச்சினை இதோடு தீர்ந்து விடும். இனிமேல் இந்தப் புலி எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை! என்று நினைத்து நிம்மதியாக கண்களை மூடிக் கொண்டார்.

மறுநாள் காலையில் வழக்கம்போல் லேசாகக் கண்களை முழித்துப் பார்த்தார். புலி நடுங்கிக் கொண்டிருந்தது. முனிவருக்குக் கோபம் வந்து விட்டது. இருந்தாலும் புலியைப் பார்த்து நடுங்கக் கூடிய அளவிற்கு அப்படி பயங்கரமான மிருகம் என்னவாக இருக்கும் என்று தெரிந்து கொள்வதற்கு அவருக்கும் ஆசை. சிங்கமாக இருக்குமா? யானையா இருக்குமா? பின்னால் திரும்பிப் பார்த்தார்.

அங்கே ஒரு பூனை நின்று கொண்டிருந்தது. ஒரு ஒரு பூனையைப் பார்த்து விட்டு எலி பயப்படலாம். புலி பயப்படலாமா? இது ஏன் இப்படி பயப்படுகின்றது. இப்பதான் முனிவருக்கு ஒரு உண்மை புரிந்தது. ஆரம்பத்திலே எலியாக இருந்தது படிப்படியாக மாறி இப்ப புலியாக இருக்கின்றது. அது உண்மை தான். இருந்தாலும் உருவம் தான் மாறிக் கொண்டு வந்திருக்கே தவிர உள்ளம் அப்படியே தான் இருக்கின்றது. உருவத்திலே தான் அது புலி! உள்ளத்திலே அது இன்னமும் எலிதான். அதனால் தான் எதிரிலே பூனையைப் பார்த்ததும் எலிக்கே உரிய பயம் வந்து விட்டது. முனிவர் அதை புரிந்தவுடன் அந்தப் புலியை மறுபடியும் எலியாக மாற்றினார். பூனையிடம் சிக்காமல் பத்திரமாக அதைக் காப்பாற்றி அனுப்பி வைத்தார். இன்னொரு விடயத்தையும் அவர் புரிந்து கொண்டார். என்ன தான் தெய்வீக வரம் கிடைத்தால் கூட நான் இறைவனின் பிரதிநிதிதானே தவிர நானே இறைவன் அல்ல! என்பதையும் உணர்ந்தார். கிடைக்கின்ற சக்தியை நியாயமாகப் பயன்படுத்த வேண்டும்.

நம்ம ஆள் ஒருவர் சம்சாரத்திற்குப் பயந்து கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் காட்டிற்கு ஓடிப் போய் விட்டார். சும்மா ஓடினால் கண்டு பிடித்திடுவார்கள் என்று கரடி வேடம் போட்டுக் கொண்டு போய் ஒரு தனிமையான இடத்தில் உட்கார்ந்தார். அங்கே கிடைக்கின்ற காய் கனிகளை சாப்பிட்டே காலம் தள்ளினார். தவம் செய்தார். ஒரு நாள் காலையில் லேசாக கண்களைத் திறந்து பார்த்தார். எதிரிலே நிஜமாகவே ஒரு கரடி வந்து உட்கார்ந்து இருக்கின்றது. அவர் பயந்து நடுங்கிப் போனார். அவர் உடம்பு நடுங்க ஆரம்பித்தவுடனே அந்தக் கரடி பேச ஆரம்பித்தது.

பயப்படாதே மாமா நான் கரடி இல்லை. உன் மச்சான். அக்கா தான் இந்த வேடம் போட்டு என்னை இங்கே அனுப்பி வைத்தார். உன்னைக் கண்டுபிடித்து கூட்டிக் கொண்டு வருவதற்காக! வேடத்தைக் கலைத்து விட்டு வீட்டிற்குப் புறப்படு! என்றார்.

# ஜனாதிபதித் தேர்தல் முடிந்த விடயம் மாகாணத் தேர்தலை நடத்துங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த இடித்துரைப்பு

**(கொழும்பு)**

**ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பின் பிரகாரம் திகதி நிச்சயிக்கப்பட்டிருப்பதால் ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதில் எந்த நெருக்கடியும் ஏற்படாது. எனினும் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு பாராளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இடித்துரைத்தார்.**



பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும், கட்சியின் முக்கிய தரப்பினருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் இடையில் உத்தேசிக்கப்பட்டுள்ள தேர்தல்கள் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணையகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த மேலும் தெரிவிக்கையில்,

திகதி மற்றும் எவ்வித பிரச்சினைகளும் இல்லாத ஜனாதிபதி தேர்தலுக்கே இன்று அனைத்து தரப்பினரும் முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து எவரும் கவனம் செலுத்துவதில்லை, தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கும் ஒரு வரையறை காணப்படுகின்றது. தேர்தல் திருத்தம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்ய வேண்டிய விடயங்களை எம்மால் செய்ய முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7)

### நாட்டில் நெருக்கடி நிலை

# ஜனாதிபதி-பாராளுமன்றம் இடையே மேலும் முற்றுகிறது முரண்பாடு!

## ஆண்டகை ஆழ்ந்த கவலை

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை மற்றும் பாராளுமன்றத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆழ்ந்த கவலையில் உள்ளார்.

அத்துடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கத்திடம் காணப்படுகின்ற தாமதமும் அவரைக் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கொழும்பில் பேராயர்



கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதன்போது அவர் இவ்வாறு கவலை வெளியிட்டதாக தினேஷ் குணவர்த்தன எம்.பி. கூறினார். (இ-7)

# நீதிமன்ற அவமதிப்பு புகார்; ரஞ்சனுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மீது ஒரு மாதத்திற்குள் வழக்குத் தாக்கல் செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உயர் நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை உத்தரவிட்டது.

நீதிமன்றத்தை அவமதித்த விவகாரம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக மாகல்கந்த சுகந்த தேரர் மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரியான சுனில் பெரேரா ஆகியோர் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், கடந்த 2017 ஓகஸ்ட் 21 ஆம் திகதி ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ரஞ்சன், நாட்டில் பெரும்பாலான சட்டத்தரணிகள் ஊழல்வாதிகள் எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு கூறியமையானது மக்களுக்கு நீதித்துறை தொடர்பில் இருக்கும் நம்பிக்கையைச் சீர்குலைக்க வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணை நடத்தி ரஞ்சனுக்கு எதிராக உரிய தண்டனையை வழங்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### மாகாணத்தேர்தலுக்கு வாய்ப்பில்லை

# ஜனாதிபதித்தேர்தலே முதலில் இடம்பெறும்

## பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை இவ்வருடத்தில் நடத்த அரசாங்கம் எந்தவிதமான முன்னேற்றகரமான ஏற்பாடுகளிலும் ஈடுபடவில்லை. எனவே ஜனாதிபதித் தேர்தலே முதலில் இடம்பெறும் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் பொதுஜன பெரமுனவின் சார்பிலேயே ஜனாதிபதி வேட்பாளர் களமிறக்கப்படுவார் என்பதில் எந்தவித மாற்றமும் கிடையாது. உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் நாங்கள் அமோக வெற்றி பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிட வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். எனவே மக்களின் கருத்திற்கு மதிப்பளிக்கப்படும் என்றும் பசில் தெரிவித்தார்.

அரசியல் கட்சிச் செயலாளர்களுக்கும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் தேர்தல் ஆணையகத்தில் இடம் பெற்றது. இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

### மினுவாங்கொட வன்முறை

## விளக்கமறியலிலிருந்த மேலும் 7 பேருக்குப்பிணை

(மினுவாங்கொட)

மினுவாங்கொட பிரதேசத்தில் இனவாத வன்முறையில் ஈடுபட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 7 பேருக்குப் பிணை வழங்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர்களை தலா 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப்பிணைகளில் விடுவிக்க மினுவாங்கொட நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

அதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்ட மேலும் இரு சந்தேகநபர்கள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையாத நிலையில் அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (இ-7)

### பொலிஸ் அதிகாரி கொலை

## கருணா குழு உறுப்பினர் தற்கொலைக்கு முயற்சி

(ஏறாவூர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் உத்தியோகத்தரின் படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கருணா குழு உறுப்பினர் சந்திரன் சுப்பிரமணியம் தற்கொலைக்கு முயற்சி செய்தார்.

இந்நிலையில், அவர் சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அவர், தற்கொலைக்கு முயற்சித்தார். இதனால் கடுமையான உடல் நலக்குறைபாட்டிற்குள்ளான சந்தேகநபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த கிரான் குளத்தைச் சேர்ந்த நாகராசா பிரசாந்தன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த 2008 ஆம் ஆண்டு கருணா குழு உறுப்பினர்கள் எனச் சந்தேகப்படும் சிலரால் கடத்திக் கொல்லப்பட்ட நிலையில், முனைக்காடு மயானத்தில் புதைக்கப்பட்டதாக அண்மையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் தெரியவந்தது.

இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாக 3 சந்தேகநபர்களை ஒட்டமாவடி, களுவாஞ்சிக்குடி, கல்லடி ஆகிய இடங்களில் வைத்து கடந்த மார்ச் மாதம் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் காணாமல்போன பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுச் கொல்லப்பட்டு கொக்கட்டிச்சோலை முனைக்காடு மயானத்தில் புதைக்கப்பட்டதாக தெரிவித்திருந்தனர்.

இதனடிப்படையில் சடலத்தை தோண்டி எடுப்பதற்கு மட்டக்களப்பு நீதவான் ஏ.சீ.றிஸ்வான் முன்னிலையில் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது சந்தேகநபர்களில் ஒருவரான லிங்கன் என்றழைக்கப்படும் சந்திரன் சுப்பிரமணியம் அவ்விடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு நீதவானின் நீண்ட விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும் சந்தேகநபர்கள் குறிப்பிட்ட இடங்களில் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் மீட்கப்படவில்லை.

இந்நிலையில் தற்காலிகமாக குறித்த சந்தேகநபர்கள் அனைவரும் நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இந்நிலையிலே நேற்று முன்தினம் இரவு இந்தத் தற்கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. (இ-7)

## பொய்களைப் பரப்புவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

### நீதியமைச்சர் தலதா எச்சரிக்கை




பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதி அதற்கான புதிய சட்டங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைத்திருக்கின்றது என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

நாட்டில் கடந்த காலங்களில் இன மோதல்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையிலான குரோதங்கள் ஏற்பட பிரதான காரணமாக இருந்தது பொய்ப் பிரசாரங்களும் இன வைராக்கியத்தைத் தூண்டும் வகையிலான பேச்சுக்களுமாகும். அதனால் எதிர்காலத்தில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதி அதற்காக புதிய சட்டங்களை கொண்டுவர இருக்கின்றோம்.

சமூக வலைத்தளங்கள் ஊடாக மத வைராக்கியத்தைப் பரப்புபவர்களுக்கு எதிராக மேற்கொள்ள இருக்கும் அரசின் நடவடிக்கை தொடர்பாக தெரிவிக்கையிலேயே நீதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## விசேட தெரிவுக்குழு குறித்து ஜனாதிபதி சபாநாயகருடன் பேச்சுக்களை நடத்த வேண்டும்

### ரவூப் ஹக்கீம் அறிவுரை



(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் குறித்து ஜனாதிபதியும் சபாநாயகரும் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி, அரசியலமைப்புக்கு இணங்க சுமுகமான தீர்வொன்றுக்கு வரவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தெரிவுக்குழு விசாரணைகள் தொடர வேண்டும் என்பதே தனது எதிர்ப்பார்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ள முதலில் நடவடிக்கை எடுக்கப்பட்டபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஒருங்கிணைந்த எதிரணியினரும் இணங்கியிருந்தார்கள். அதற்கிணங்கவே தெரிவுக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

ஆனால், தற்போது ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர வேறு எந்த எதிர்க் கட்சியும் இதற்கு ஒத்துழைப்பை வழங்கவில்லை.

இதனால், இதன் மீதான நம்பிக்கை தொடர்பில் நாம் எவ்வாறான உத்தரவாதத்தை வழங்கினாலும் விமர்சனங்கள் வரும் என்பதை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். அத்தோடு, தெரிவுக் குழு விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கு விமர்சனங்கள் உள்ளன.

எவ்வாறாயினும் இந்தச் செயற்பாட்டை முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும்.

இதற்கு முன்னரும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் சட்டவாக்க அதிகாரத்துக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

இந்த முரண்பாடுகளைத் தீர்க்க வேண்டும். ஜனாதிபதியும் சபாநாயகரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

மேலும் அரசியலமைப்புக்கு உட்பட்டதாக தீர்வை இந்த விடயத்தில் முன்வைக்க வேண்டும் என்பதை நாம் இங்கு கூறிக் கொள்கின்றோம்.

தெரிவுக்குழு விவகாரம் தொடர்பில் எடுத்த தீர்மானத்தை உடனடியாக நாம் மாற்றிக்கொண்டாலும் சமூகத்தில் பல்வேறு கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளாக வேண்டியிருக்கும்.


எனவே, இந்தப் பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### மர ஆலைகளைத் தடை செய்யும்

## மைத்திரியின் தீர்மானத்திற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதப் போர்

(மொரட்டுவ)

மர ஆலைகளைத் தடை செய்வதற்கு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக மொரட்டுவயில் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



மொரட்டுவ மர ஆலை உரிமையாளர்கள், மொரட்டுவ நகர சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த இந்த உண்ணா விரதப் போராட்டம் நேற்றுப் புதன்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.


தொடர்ந்து சில நாட்களாக நடத்திவந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பின்னரே சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை இவர்கள் ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டத்தில் மதகுருமார்களும் இணைந்துகொண்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் மரக்குற்றிகளை வைத்திருக்கும் மர ஆலை உரிமையாளர்களின் அனுமதிப் பத்திரத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொருளாதார அமைச்சை நான் ஏற்கப்போவதில்லை

### மத்தும மறுப்பு



(கொழும்பு)

தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள கிராமப்புற பொருளாதார அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

குறித்த அமைச்சிற்கு கீழ் எந்த முக்கிய நிறுவனமும் வரவில்லை என்பதனாலேயே அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

அந்தவகையில் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள புதிய அமைச்சின் கீழ் ஏழு பொருளாதார மையங்கள் மட்டுமே, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே அதில் முக்கிய நிறுவனங்கள் உள்ளடக்கப்படாதமையால் அப் பதவியை ஏற்க மாட்டேன் என ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு மத்தும தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

இருந்தபோதிலும் தாம் இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இணைந்து ஒத்துழைக்க வேண்டுமானால் தமது இனத்தின் அடையாளத்தையும் தேசியக் கொடியில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். தமிழ்த் தலைவர்களின் இவ்வாறான கருத்துக்கள் நிச்சயமாகத் தமிழ்மக்கள் மத்தியில் சென்றடைந்திருக்கும்.

சிங்கள அரசியல் தலைவர்கள் சிங்கக்கொடியை தேசியக் கொடியாக ஏற்று இலங்கையின் சுதந்திர தினத்தன்று அதனை ஏற்றுவதற்குத் தீவிரமாகச் செயற்பட்டனர். இவ்வேளையில் வடக்கு- கிழக்குத் தமிழர் தமது அபிலாசைகளையும் இலங்கை அரசுக்குத் தெரிவித்தனர்.

இருந்தபோதிலும் சிங்களப் பெரும்பான்மை அரசு தமது எண்ணத்தையே தேசியக்கொடிப் பிரச்சினையில் நிறைவேற்றியது. இந்நிகழ்வுகள் தமிழரின் உணர்வுகளை மிகவும் பாதித்திருக்கும். அவ்வாறான உணர்வலைகள் அவர்களைத் தமது தேசியம் பற்றி நிச்சயம் எழுச்சிகொள்ளச் செய்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை சுதந்திரம் அடைந்த 1948 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இரண்டாவது பாராளுமன்றக்கூட்டத் தொடரில் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறிப்பதன் பொருட்டு சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் பாராளுமன்றத்தில் அம்மசோதாவை முன்மொழிந்து அதனைப் பெரும்பான்மைச் சிங்களப் பிரதிநிதிகளின் வாக்களிப்பினாலும் சில சிறுபான்மைத் தமிழரின் சாதகமான வாக்களிப்பினாலும் நிறைவேற்றி இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கிய நிகழ்வு இலங்கைத் தமிழர் மத்தியில் பெரும் பீதியையும் அச்சத்தையும் நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும்.



எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

இதன் விளைவாகவே எஸ். ஜே.வி. செல்வநாயகம் சிங்கள அரசுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து தமது சகாக்களுடன் விலகி தமிழரசுக் கட்சியை 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழரின் அரசியல் அபிலாசைகளை ஜனநாயக ரீதியில் வென்றெடுக்கும் நோக்கில் தமிழரசுக் கட்சி தோற்றுவிக்கப்பட்டமையானது தமிழ்த் தேசியவாதத்தின் ஒரு மைல்கல்லாக அமைந்தமையைக் காணமுடிகிறது.

1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று பாராளுமன்றத்தை அமைத்தது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி வலதுசாரி அணியின் ஓர் அங்கமாக இருந்தபோதும் அது தன்னைத் தனியானதொரு கட்சியாகவே பேணிக் கொண்டது.

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் 1952 இலிருந்து தமிழரின் அரசியல் உரிமைக்காகக் குரல் கொடுத்தும் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தியும் தமிழரின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்கவும் தமிழரின் தேசியப் பிரச்சினை சமஷ்டி முறையில் தீர்க்கப்படவேண்டுமென்றும் அகிம்சை வழியிற் போராட்டங்களை நிகழ்த்தினர்.

1952 ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை அரசின்முன் வைத்ததும் ஏற்கனவே குறிப்பிட்டது போல சி. சுந்தரலிங்கம் Motion for restored Ceylon Free State மசோதாவை முன்வைத்ததும் தமிழரின் சுதந்திர தாகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

இவ் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்ட 1947 இலிருந்து 1952 வரையிலான தமிழர் அரசியல் தொடர்பான வரலாற்றுப் பின்னணியையிட்டு இதுவரையும் ஆய்வுசெய்த அறிஞர்கள் தெளிவான முறையில் விளக்கங்கள் தரத் தவறியமையால் அவ்விடயங்கள் பற்றி அதிகார பூர்வமான ஆவணங்களின் உதவியுடன் மிகவும் விரிவாக இங்கு ஆராயப் பட்டுள்ளன.

1952 களிலிருந்து 1987 வரையிலான தமிழர் சம்பந்தப்பட்ட பல்வேறுபட்ட அரசியல் பிரச்சினைகளும் பல அரசியல் வரலாற்று அறிஞரினால் ஆய்வு செய்யப்பட்டு பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

இதன் காரணத்தினால் மேற்படி காலகட்டத் தமிழர் அரசியல் நிலைமைகள் பொறுத்து மிக முக்கியமான வரலாற்றுச் சம்பவங்களை பிரதானமாக எடுத்துக்காட்டி அந்நிகழ்வுகள் எவ்வளவு தூரம் தமிழரின் தேசியவாத எழுச்சிக்கும் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் பங்களிப்புச் செய்தன என்பது பற்றி சுருக்கமானதொரு வரலாற்றுப் பின்னணியை தொடர்வது பொருத்தமானதாகும்.

1952-1956 காலப்பகுதியில் சில முக்கியமான அரசியல் சம்பவங்கள் இலங்கை அரசியலிலும் குறிப்பாகத் தமிழ் அரசியலிலும் நடைபெற்றன. 1952 தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்னர் சிங்களப் பெரும்பான்மை மக்களால் தேசபிதா என அழைக்கப்பட்ட டி.எஸ். சேனநாயக்க காலமானார். அவருடைய மகன் டட்லி சேனநாயக்க பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் 1952 தேர்தலில் நான்கு பிரதிநிதித்துவத்தைப் பெற்றதோடு டட்லி சேனநாயக்க அரசாங் த்திற்கு தமது வெளிப்படையான ஆதரவையும் பாராளுமன்றத்தில் வழங்க முன்வந்தனர். இதனால் பொன்னம்பலம் மீண்டும் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

டட்லி சேனநாயக்கவுக்கும் சேர். ஜோன் கொத்தலாவலவுக்கும் எழுந்த அரசியல் கொள்கை பற்றிய தகராறில் டட்லி சேனநாயக்க தனது பதவியை இராஜினாமாச் செய்ய அந்த இடத்திற்கு கொத்தலாவல தெரிவு செய்யப்பட்டார். கொத்தலாவல பிரதமராக வந்ததும் 1953 இல் பொன்னம்பலத்தின் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுடன் தமிழ்க் காங்கிரஸின் அரசியல் செல்வாக்கு தமிழர் மத்தியில் சரியும் நிலைக்குத் தள்ளப்பட்டது. 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி இரண்டு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையே பெற்றிருந்தது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதியில் தொடர்ந்தும் 1952 இல் போட்டியிட்டார்.

(தொடரும்)

### உலகில் நாமே பெரும்பான்மை

# ஹிஸ்புல்லாவின் பேச்சு மன்னிக்க முடியாத குற்றம்

## எஸ்.பி.எதிர்ப்பு

**(ஏறாவூர்)**

**கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, காத்தான்குடியில் அண்மையில் தெரிவித்த கருத்து மன்னிக்க முடியாத குற்றம் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.**






இது சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பார் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஹிஸ்புல்லா தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், அவரை விமர்சிக்கவில்லை எனவும் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஹிஸ்புல்லா எமது கட்சியின் உறுப்பினர். கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர். எனினும் இலங்கையில் மாத்திரமே நாங்கள் சிறுபான்மை உலகில் பெரும்பான்மை என ஹிஸ்புல்லா கூறியது இந்தச் சந்தர்ப்பத்தில் ஆபத்தான மக்களை ஆத்திரமூட்டும் கருத்து.

இதனால், கட்சியின் மட்டத்தில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க எதிர்பார்த்துள்ளோம் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# மாலைதீவில் நாமல்



பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மாலைதீவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மாலைதீவுக்கு விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் மாலைதீவு ஜனாதிபதி மற்றும் அந்நாட்டு அரசியல்வாதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.

நேற்று முன்தினம் மாலைதீவுக்கான விஜயத்தை மேற்கொண்ட நாமல், மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூன் அப்துல் கையூம் மற்றும் மாலைதீவின் சபாநாயகரும் முன்னாள் ஜனாதிபதியுமான மொஹமட் நஷீட் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். (இ-7)

# அரச மரக்கிளை முறிந்து விழுந்ததில் மூன்று முன்பள்ளி மாணவர்கள் காயம்

குருநாகல் நாரம்மலயில் அரச மரக்கிளை முறிந்து விழுந்ததில் மூன்று முன்பள்ளி மாணவர்கள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த குறித்த மூன்று மாணவர்களும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.


நாட்டின் பல இடங்களிலும் கடந்த சில நாட்களாக கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1747

Search for people, places and things

## டினுஜன்

செய்தி: பிரபல ரவுடி மனைவியுடன் சண்டைபோட்டு தற்கொலை..
ரவுடிக்கே இந்த நிலைமைனா
நான் எல்லாம்... ஐயையோ நெனச்சே
பார்க்க முடியல சாமி... அவ்வ்வ்...




## பிரசாத்

**இன்றைய தத்துவம்**
**போர் யுக்தி**

ஒன்று- காளையை முன்னால் நின்று தாக்கக்கூடாது

இரண்டு- கழுதையை பின்னால் நின்று தாக்கக்கூடாது

மூன்று- கோபமாக இருக்கும் மனைவியை
எந்தக் கோணத்திலும் எதிர்க்க முயற்சிக்க வேண்டாம்

## குணா

காலையில எழுந்தவுடன் செய்யக்கூடிய யோகா
இன்னும் தூக்கம் போகல... சமாளிப்போம்



## சந்தோஷ்

நல்லவனை ஏமாளியாகவும்
தீயவனை அறிவாளியாகவும்
காட்சிப்படுத்தக்கூடியது பணம் மட்டுமே



## ஜானகி

கோபமோ, வெறுப்போ, பாசமோ, அன்போ மனம் விட்டுப் பேசுங்கள். மூடி வைத்திருப்பதால் மனதில் சுமைகள் மட்டுமே கூடும், உங்கள் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது



## ஈஸ்வரன்

நாமுண்டு நம்ம வேலையுண்டுனு எப்ப
இருக்கோமோ அன்றையிலிருந்து நமக்கு
நல்லகாலம் பொறந்திடும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஒக்டோபர் அரசியல் நெருக்கடியையடுத்து பொதுத் தேர்தலை நடத்தியிருந்தால் இன்று இந்நிலை உருவாகியிருக்காது

## பழைய விடயங்களை கிளறுகிறார் பந்துல



**(கொழும்பு)**

**கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் போது ஜனாதிபதி, பாராளுமன்றத்தைக் கலைத்ததையடுத்து பொதுத் தேர்தலை ஜனவரி மாதம் நடத்தியிருந்தால் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றிருக்கும். நாட்டில் தற்போதைய நெருக்கடி சூழ்நிலை தோன்றியிருக்காது என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

நாட்டில் தற்போது பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பிரச்சினைகள் உருவாகி நாடு அராஜக நிலைக்கு முகம் கொடுத்துள்ளது. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பந்தமான விசாரணையை முன்னெடுக்கும் பாராளுமன்ற தெரிவுக் குழு தொடர்பான பிரச்சினை காரணமாக ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டங்களை நடத்துவதில்லை. அதனால் நாட்டில் நிலையான அரசாங்கம் இல்லாத நிலை உருவாகியுள்ளது.

இதில் இருந்து அரசாங்கத்திற்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்பது உலக நாடுகளுக்கு தெளிவாகியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களும் தொழிலாளிகளுமே இதனால் பாரியளவில் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். மேலும் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நட்டஈடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் இது வரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பு வஜிராஷ்ரம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# எந்த விசாரணைக்கும் முகம் கொடுக்கத்தயார்

## றிசாத் தேரர்களிடம் தெரிவிப்பு



(கண்டி)

எந்த விசாரணைகளுக்கும் முகம் கொடுக்கத் தான் தயார் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான றிசாத் பதியுதீன் மகாநாயக்க தேரர்களிடம் தெரிவித்தார்.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகாநாயக்க தேரர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டியில் இடம்பெற்றது. இதன்போதே தன்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதத்தை துடைத்தெறிவதற்கு முஸ்லிம் சமூகம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதல் நடந்த அன்றைய தினமே பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்து, தாம் உறுதி வழங்கியதாகவும் அன்று தொட்டு இன்று வரை இந்தப் பயங்கரவாதத்தை அழித்தொழிப்பதற்கு முஸ்லிம் சமூகம் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் றிசாத் தெரிவித்தார்.

அத்துடன் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு பாதுகாப்பு படையினருக்கு தமது சமூகம் உதவியதாகவும் குறிப்பாக சாய்ந்தமருதில் ஒளிந்திருந்த பயங்கரவாதிகள் தம்மை காட்டிக் கொடுக்க வேண்டாமென கோடிக் கணக்கான பணத்தை கொடுப்பதற்கு தயாராகியிருந்த போதும் தமது மக்கள் அவர்கள் இருந்த இடத்தைக் காட்டிக் கொடுத்து நாட்டிற்கு உதவி புரிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாதத்திற்கு மதம் கிடையாது என்றும் இவ்வாறான பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோரை தாம் ஒரு போதும் முஸ்லிம்கள் என சொல்லப்போவதில்லை எனவும் சுட்டிக் காட்டினார்.

இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் இந்த பயங்கரவாதத்திற்கு முற்றுமுழுதாக எதிரானவர்கள் எனவும் தெரிவித்தார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் உரிய முறையில் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற வேளை, சில அரசியல்வாதிகள் தமது குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக தனக்கெதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகவும் றிசாத் குற்றம்சாட்டினார். (இ-7)

# தேசிய புலனாய்வுப் பிரிவு தலைவராக மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க



(கொழும்பு)

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டார்.

ஜூன் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

இவருக்கான நியமனக் கடிதம் பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சாந்த கோட்டே கொடவால் கையளிக்கப்பட்டது.

இதையடுத்து, அவர் கடந்த 11 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றார்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக, இருந்த சிசிர மெண்டிஸ் பதவி விலகியதை அடுத்தே இந்த நியமனம் வழங்கப்பட்டது.

இராணுவத்தில் 1984 ஆம் ஆண்டு இணைந்த மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்கெடுத்தவர்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரிக்கும் தெரிவுக்குழு முன்பாக சாட்சியமளித்ததையடுத்து, சிசிர மெண்டிஸை பதவியிலிருந்து விலக ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெறுப்புணர்வுப் பேச்சுக்களுக்கு எதிரான சட்ட உருவாக்கத்தில் மனிதாபிமானத்தை முன்னிலைப்படுத்த வேண்டும்-அலி சப்ரி



(கொழும்பு)

வெறுப்புணர்வுப் பேச்சுக்களுக்கு எதிரான சட்ட உருவாக்கம் மற்றும் வலுவூட்டலுக்கான சந்தர்ப்பமாக தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

ஏனைய நாடுகளில் வெறுப்புணர்வுப் பேச்சுக்கு எதிராக நடைமுறையிலிருக்கும் சட்டாங்களை எமது நாட்டில் அவ்வாறே அமுல்படுத்துவதென்பது சாத்தியமற்றது. எனினும் ஏனைய நாடுகளின் சட்டங்களைக் கருத்திற் கொண்டு எமது நாட்டிற்குப் பொருத்தமான வகையில் வெறுப்புணர்வுப் பேச்சுக்கு எதிரான சட்டங்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

அதேவேளை உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வெறுப்புணர்வு பிரசாரங்களைக் கருத்திற்கொண்டு மாத்திரம் இதனைச் செய்ய முடியாது. நாமனைவரும் இன,மத அடையாளங்களை இரண்டாம்பட்சமாக்கி மனிதாபிமானத்திற்கு முன்னுரிமை அளித்துச் சிந்திப்பதன் ஊடாகவே வெறுப்புணர்வு பேச்சுக்களுக்கு எதிரான சட்டங்களை நியாயபூர்வமானதாகக் கட்டியெழுப்ப முடியும்.

புனித அல்-குர்ஆன் நூலில் 23 வருடங்களில் இடம்பெற்ற சம்பவங்கள், சூழ்நிலைகள் என்பவற்றைக் கொண்டு பல்வேறு விடயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.


அவற்றில் தனியாக ஒரு கூற்றை மாத்திரம் எடுத்துக் கொண்டு, அதன் முழு உள்ளடக்கத்தையும் விளங்கிக் கொள்ள முடியாது. அதனடிப்படையிலான வெறுப்புணர்வு பேச்சுக்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 60 | 60 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 240 | 250 | 400 |
| தக்காளி | 100 | 80 | 80 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 150 | 120 | 100 |
| கோவா | 140 | 120 | 100 | 80 | 120 |
| கரட் | 150 | 140 | 200 | 150 | 200 |
| பூசணி | 80 | 60 | 70 | 50 | 80 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 200 | 130 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 180 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 60 | 70 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 160 | 100 | 80 | 160 |
| லீக்ஸ் | 150 | 100 | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 100 | 60 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 200 | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 140 | 120 | 160 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 200 | 240 |
| கத்தரிதும்புள்ளா | 80 | 50 | — | 50 | 100 |
| கீரை-1பிடி | 30 | 25 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 180 | 150 | 110 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 60 | 110 | 120 |




# புள்ளிமான்



ஒரு காட்டில் ஒரு புள்ளி மான், ஒரு சிறு முயல், ஒரு நரி மூன்றும் நண்பர்களாக இருந்தன. ஒரு சமயம் புள்ளி மானைப் பார்ப்பதற்காக, அதன் உறவினரான புள்ளி மான் ஒன்று வேறு காட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது.

அதை தற்செயலாகச் சிறுத்தை ஒன்று பார்த்தது. அதன் நாக்கில் நீர் ஊறியது. உடனே அது புள்ளிமானுக்குத் தெரியாமல் பின்தொடர்ந்து சென்று அது எதிர்பாராத சமயத்தில் அதை அடித்து வீழ்த்தி சுவைத்துத் தின்றது. இதை அக்காட்டில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மரங்கொத்திப் பறவை பார்த்தது. அது உடனே விரைந்து சென்று புள்ளிமானிடம் தகவல் கூறியது.

"உன்னுடைய உறவுக்காரப் புள்ளிமான் சாவதற்குக் கொஞ்ச நேரம் முன்னால் தான் உன் பெயரை என்னிடம் கூறி, உன் இருப்பிடத்திற்கு எப்படிப் போக வேண்டும் என்று வழி கேட்டது. நான் தான் சொல்லி அனுப்பினேன். ஆனால், உன்னுடைய எதிரியான அந்தச் சிறுத்தை இப்படிச் செய்யும் என்று எதிர்பார்க்கவில்லை. அது உனக்கு மட்டுமல்ல, இங்குள்ள ஏனைய சின்னச் சின்ன விலங்குகளுக்கும்கூட தீமையே செய்து வருகிறது. அதை எப்படியாவது ஒழித்துக் கட்டும் வேலையைப் பார். இல்லாவிட்டால் உன் குடும்பத்தைக் கூட என்றாவது ஒரு நாள் கொன்று தின்று விடும்!" என்று சொல்லி விட்டுப் பறந்தது.

மான் பெரிதும் கவலைப் பட்டுப் போயிற்று. அப்போது அதைப் பார்க்க முயலும் நரியும் வந்தன. மானின் சோகத்தைக் கண்டு "என்ன நடந்தது?" என்று கேட்டன.

மான், மரங்கொத்திப் பறவை கூறியதைக் கவலையுடன் கூறியது.

"அவ்வளவு பெரிய சிறுத்தையை நம்மால் எப்படித் தீர்த்துக் கட்ட முடியும்?" என்று கேட்டது மான்.

நரி பலத்த யோசனையில் ஆழ்ந்தது. பிறகு "நான் சொல்கிறபடி செய். நாம் அனைவரும் நலமாக இருக்கலாம். அந்தச் சிறுத்தையையும் ஒழித்துக் கட்டலாம்!" என்று கூறியது.

பின், மானின் காதோடு காதாக அந்த இரகசியத்தைக் கூறியது. மான் மகிழ்ந்தது. மறுநாள் சிறுத்தையை நரி சந்தித்தது.

"சிறுத்தை அவர்களே நலமா?" என்று நலம் விசாரித்தது.

"நலத்துக்கு ஒரு குறையும் இல்லை. என்ன இந்தப் பக்கம்?" என்று விசாரித்தது.

"காதில் கேட்ட ஒரு விடயத்தை உன்னிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்று வந்தேன். உனக்குப் பெரிய ஆபத்துக் காத்திருக்கிறது!" என்றது நரி.

"எனக்கா, ஆபத்தா? யாரிடமிருந்து? என்னை மிஞ்சியவன் இந்தக் காட்டிலிருக்கிறானா?" என்று அலட்சியமாகச் சிரித்தது சிறுத்தை.

"சரி, அப்படியானால் நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தது நரி.

"நில்... சொல்ல வந்த விடயத்தைச் சொல்லி விட்டுப் போ!" என்று கூறியது சிறுத்தை.

"புள்ளிமானைத் தேடி அதன் உறவுக்காரப் புள்ளிமான் ஒன்று நேற்று இங்கே வந்திருக்கிறது. வரும் போது மரங்கொத்திப் பறவை ஒன்றிடம் புள்ளிமானின் விலாசத்தைத் தந்து விசாரித்திருக்கிறது. அதுவும் விலாசத்தைச் சொல்லி விட்டுச் சென்றிருக்கிறது.

ஆனால், அது வரும் வழியிலே, நீ அதை மடக்கிக் கொன்று தின்று விட்டாய். ஆகையினால் புள்ளிமான்கள் உன் மேல் கோபமாக உள்ளன. அவை உன்னை அழித்தே தீர வேண்டும் என்று சதியாலோசனையில் ஈடுபட்டு வருகின்றன.

நீயும் அசைவம், நானும் அசைவம் என்ற இனப்பற்றால் சொல்ல வந்தேன். நீயோ வர இருக்கும் ஆபத்தை அறியாமல் வீர வசனம் பேசிக் கொண்டிருக்கிறாய். எனக்கென்ன சொல்லுவதைச் சொல்லி விட்டேன். இனி அடுத்துச் செய்ய வேண்டிய பொறுப்பு உன்னுடையது!" என்றது நரி.

சிறுத்தை திடுக்கிட்டுப் போனது... "இவ்வளவு விபரத்தைச் சொன்ன நீ அவை எங்கே சதியாலோசனை நடத்துகின்றன என்பதையும் சொல்லேன்" என்று கெஞ்சும் குரலில் கேட்டது.

நரி சிந்தனை செய்தது. "சரி என்னுடன் வா, நான் கூட்டிட்டுப் போகிறேன். ஆனால், நான்தான் காட்டிக் கொடுத்தேன் என்று நீ சொல்லி விடக்கூடாது" என்ற நிபந்தனையுடன் அதை அழைத்துச் சென்றது.

காட்டின் நடுவில் ஒரு சின்னக் குன்றும், குகைப் பகுதியும் இருந்தன. அதன் முன்னிலையில் மைதானம் போன்ற மணல் பரப்பு இருந்தது. அந்தக் குகையின் வெளிப்பக்கம் பார்த்தவாறு புள்ளி மானும், புள்ளிமான் குடும்பமும் பேசிக் கொண்டிருந்தன.

போதாதற்குச் சிறு முயலும், அதன் குடும்பமும் இருந்தன. குகை முழுக்க மிருகங்கள் இருப்பது போன்ற சூழ்நிலை காணப்பட்டது.

நரி ஒரு ஓரத்தில் மறைந்து நின்று அக்காட்சியைக் காட்டியது. சிறுத்தைக்கு நாவில் நீர் ஊறியது.

"ஆகா ஒரே நேரத்தில் எத்தனை மிருகங்கள். அத்தனையையும் அடித்துக் கொன்று விடுவேன். அத்துடன் ஒரு மாதத்துக்குச் சாப்பாட்டுக்குக் கவலையில்லை!" என்று நினைத்து, சிறுத்தை பதுங்கிப் பதுங்கிச்சென்று மணல் பகுதிக்குள் நுழைந்தது. அது மணல் பகுதியில் பூனை போலத் துள்ளிக் குதித்ததுதான் தாமதம், மணல் நறுநறவென விலக ஆரம்பித்தது.

சிறுத்தை அடி எடுத்து வைப்பதற்குள் அதன் இரண்டு கால்கள் மணலில் புதைந்தன. அது ஆபத்தான புதை மணல் நிறைந்த பகுதி என்பது தெரியாமல் அதற்குள் சென்று மாட்டிக் கொண்டது சிறுத்தை. அதிலிருந்து விடுபட பலமாகக் கால்களை உதறியது.

ம்... ஹூம்... மெல்ல மெல்ல சிறுத்தை உள்ளே சென்று மணலுக்குள் மூழ்கிப் போயிற்று. அதைக்கவனித்துக்கொண்டிருந்த விலங்குகள் வெற்றிக் கூச்சலிட்டன. பின் நரி காட்டிய வேறு வழியின் மூலமாக தங்கள் தங்கள் இருப்பிடத்தை அடைந்து ஆனந்தமாக இருந்தன.

## பொது அறிவுத்துணுக்குகள்

- கணிதத்தில் பூஜ்யத்தைச் (0) சேர்ந்தவர், ஆரியபட்டர்.
- ஆக்டோபசுக்கு 3 இதயங்கள் உள்ளன.
- அட்டைப்பூச்சிகளுக்கு 4 மூக்குகள் உள்ளன.
- நீலநிறத்தைப் பார்க்க முடிந்த ஒரே பறவை, ஆந்தை.
- நெருப்புக்கோழியின் கண்கள், அதன் மூளையைவிடப் பெரியதாக இருக்கும்.
- டொல்பின்கள், மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் நீந்தும்.
- 13 ஆம் நூற்றாண்டில், ஞானதேவ் என்ற கவிஞர் தான் 'பரமபத' விளையாட்டைக் கண்டுபிடித்தார்.
- நத்தைகள், 3 ஆண்டுகள் வரை தூங்கும் தன்மை பெற்றவை.
- ராணி எறும்புகள், 30 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.
- மனிதர்களின் தோலுக்கும், தசைக்கும் இடையிலான ஒட்டுதல் தான் கன்னத்தில் விழும் குழிக்குக் காரணம்.

## சிந்தனைத்துளிகள்

- மனிதன் சூழ்நிலைக்காக படைக்கப்படவில்லை. சூழ்நிலைகளே மனிதனுக்காக படைக்கப்பட்டன.
- ஒரு மரத்தில் உள்ள பழங்களை எண்ணிவிடலாம். ஆனால் ஒரு பழத்தால் உருவாகப்போகும் மரங்களை எண்ண முடியாது.
- குழந்தையும் குடிகாரனும் உண்மையே பேசுவார்கள்.
- நாணயமாக இருப்பவனிடம் எப்போதும் குழந்தைத்தனம் காணப்படும்.
- தேவையில்லாததை நீ வாங்கினால் விரைவில் உனக்கு தேவையானதை விற்றுவிடுவாய்.
- செலவுக்கு மேல் கூடுதலாக வருவாயுள்ளவன் செல்வன். வரவுக்கு மேலே செலவழிப்பவன் ஏழை.

## விடுகதைகளும் விடைகளும்

- நோயின்றி நாளும் மெலிவாள். கோள் சொல்லி நாளும் கழிவாள். அவள் யார்?

**நாட்காட்டியின் தாள்**

- மழைக்காலம் வந்தாலே மகராசி சங்கீதம் தான். அவள் யார்?

**தவளை**

- அரைசாண் மனிதனுக்கு வயிறு நிறைய முட்டை. அவன் யார்?

**வெண்டைக்காய்**

- உலகமெங்கும் சுற்றும் அவனை ஒருவரும் கண்டதில்லை. அவன் யார்?

**காற்று**

- அக்கா தங்கை உறவுண்டு. அருகருகே வீடு உண்டு. கிட்டக்கிட்ட வந்தாலும் தொட்டுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் யார்?

**கண்கள்**

- வந்தால் கொடுக்கும், வராவிட்டால் கெடுக்கும். அது என்ன?

**மழை**

- எரித்தால் சிவப்பு அணைந்தால் கறுப்பு. அது என்ன?

**கரித்துண்டு**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P: 021 567 1530
website: www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவைக்கு ஓர் அன்பு மடல்

தமிழ் மக்கள் பேரவைக்கு அன்பு வணக்கம்.

காலம் உணர்ந்து உருவாக்கப்பட்ட அமைப்புத் தான் தமிழ் மக்கள் பேரவை.

தமிழ் அரசியல் தலைமைகள், அரசியல் கட்சிகள் இனம் சார் நலனை விடுத்து தத்தம் அரசியல் நலன் மீது கருசனை கொண்ட போது, எங்கள் இனத்தின் நலன்களும் உரிமைகளும் பின்தள்ளப்பட்டன.

ஆளுக்கு ஆள் அரசியல் கதைக்கின்ற ஒரு சமூகமாகத் தமிழினம் மாற்றமடைந்தது.

தவிர, எங்களுக்கான அரசியல் சூழ்நிலை தள்ளாடத் தொடங்கியது. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற நேர்மையானவர்களையும் களங்கப்படுத்த ஒரு கூட்டம் தயாராகியது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் அன்றைய வடக்கின் முதலமைச்சரும் தமிழ் மக்களின் அபிமானத்துக்குரியவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை இணைத் தலைவராகக் கொண்டு தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது.

எங்கள் மண்ணில் இருந்து சேவையாற்றுகின்ற, தமிழ் மக்களின் துன்ப துயரங்களை நேரில் கண்டு அனுபவித்த தமிழ்ப் பற்று மிகுந்த வைத்திய நிபுணர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சமூகப் பிரதிநிதிகள், பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள் என்ற பிரதிநிதித்துவ அடிப்படையிலும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் என்ற கட்டமைப்பையும் கொண்டதாக வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது.

பேரவையின் உருவாக்கம் தந்த பலன்களை மக்கள் அறிவர்.

ஆயினும் பேரவை ஆரம்பிக்கப்பட்டபோது சில ஊடகங்களும் எதிர் அரசியல்வாதிகளும் முன்வைத்த விமர்சனங்கள் பேரவையைக் காயப்படுத்தின.

இருந்தும் மக்கள் இயக்கம் என்ற ஒரே இலக்கோடு தமிழ் மக்கள் பேரவை தன் பயணத்தைத் தொடர்கிறது.

ஆயினும் இப்போது பேரவையை சிலர் புதிதாக விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

பரவாயில்லை, யார் எப்படி விமர்சித்தாலும் தமிழ் மக்கள் பேரவை அந்த விமர்சனங்களுக்குப் பதிலளிப்பதை விடுத்து, தனது மக்கள் பணியைத் தொடர வேண்டும்.

பொதுவில் எங்கள் தமிழ் அரசியல் கட்சிகள் குறைகூறுவதிலும் குற்றஞ் சாட்டுவதிலும் விமர்சிப்பதிலும் கற்பனையில் கதை அளப்பதிலுமே காலத்தை வீணாக்கியுள்ளன.

இந்த அவல நிலைமைக்கு தமிழ் மக்கள் பேரவை ஆளாகக்கூடாது என்பதை எடுத்துரைக்கவே இக்கடிதம் எழுதப்படுகிறது.

வெறுவிலித்தனமான குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் கடந்து, தமிழ் மக்களுக்கு என்ன செய்தோம் என்பதை தமிழ் மக்கள் பேரவை எடுத்துக்கூற வேண்டும்.

அவ்வாறு கூறும்போது அதனை தமிழ் மக்கள் நிச்சயம் அங்கீகரிப்பர்.

மாறாக விமர்சிப்பவர்களுக்கு விமர்சிக்கும் உரிமை உண்டு. விமர்சிப்பவர்கள் விரும்பினால் நீதி, நியாயம் என்ற சமூக வழக்கிற்கும் கணக்குக் கொடுத்து விமர்சித்தால் அஃது தர்மம் மிகுந்ததாக இருக்கும். மற்றும்படி மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பாகும்.

## சதொச வாகனங்கள் சாய்ந்தமருதுக்கு பயணம்

# றிசாத்தின் முறையற்ற செயற்பாடுகளே அடிப்படைவாதத்தை வலுப்படுத்தியது

## விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சதொச நிறுவனத்தின் வாகனங்கள் அடிப்படைவாதிகளின் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆதாரபூர்வமாக நீதிமன்றில் பகிரங்கப்படுத்தத்தயார்.

றிசாத் பதியுதீனின் அமைச்சின் வரப்பிரசாதங்கள் முழுமையாக அடிப்படைவாத வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம்சாட்டினார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் லங்கா சதொச நிறுவனத்திற்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த போது சதொச நிறுவனத்தில் இருந்து போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன. இஸ்லாமிய அடிப்படைவாதமும், போதைப்பொருள் விற்பனையும் வேறல்ல இரண்டும் ஒன்றே.

சதொச நிறுவனம் முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் அமைச்சுக்கு பொறுப்பாக்கப்பட முன்னர் சதொச நிறுவனத்தில் பாரியளவு போதைப்பொருட்கள் கைப்பற்றப்படவில்லை. அடிப்படைவாத தேவைகளுக்கு அரச நிறுவனத்தின் வாகனங்களும் முறைகேடாக பயன்படுத்தப்படவில்லை. முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் முறையற்ற செயற் பாடுகளே இஸ்லாமிய அடிப்படைவாதத்தை வலுப்படுத்தியுள்ளது.

சதொச நிறுவனத்தில் முறைகேடுகள் இடம் பெறுகின்றன என்று கடந்த காலங்களில் ஆதாரபூர்வமாக குற்றச்சாட்டுக்களை முன் வைத்த போது அமைதி காத்த சதொச நிறுவனம் தற்போது எமக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளமை விசேட அம்சமாகும்.

ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அடிப்படைவாதிகளின் தாக்குதலுக்கும், அதற்கு முற்பட்ட தினங்களில் அடிப்படை வாதிகளின் ஏனைய செயற்பாடுகளுக்கும் சதொச நிறுவனத்தின் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

அரச வாகனங்களை முறை கேடாக பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் நாம் பகிரங்கப்படுத்திய செய்தி சதொச நிறுவனத்தின் பெருமைக்கு பங்கம் விளைவித்துள்ளதாக குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

கடந்த காலங்களில் இந் நிறுவனத்தில் இடம் பெற்ற முறைகேடுகள் தொடர்பில் புதிதாக தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் கிடையாது.

சதொச நிறுவனம் நீதியைப் பெற்றுக் கொள்ள நீதிமன்றத்தை நாடுவது வரவேற்கத்தக்கது.

கொழும்பில் இருந்து சதொச நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள் தாக்குதல் இடம் பெறுவதற்கு முன்னர் சாய்ந்தமருது பிரதேசத்திற்கு தொடர்ச்சியாக சென்றுள்ளமைக்கான ஆதாரங்கள் முழுமையாக கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றை நீதிமன்றில் பகிரங்கப்படுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்கள் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்நிலையில் குறித்த சந்திப்பின் போது நாட்டில் அண்மையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னரான இலங்கை நிலைமை மற்றும் அரசியல் நிலவரங்கள் குறித்து முக்கியமாக கலந்தாலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## நளினியை முன்னிலைப்படுத்துவதில் என்ன சிக்கல்-நீதிமன்றம் கேள்வி

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 28 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நளினியை, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதில் என்ன சிக்கல் உள்ளதென தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி, லண்டனிலுள்ள தனது மகளின் திருமண ஏற்பாடுகளை கவனிப்பதற்காக ஆறு மாதம் பரோல் கேட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

மேலும் இந்த மனு மீதான விசாரணையின் போது, நேரில் முன்னிலையாகி வாதிடுவதற்கு அனுமதி வழங்க வேண்டுமெனவும் நீதிமன்றத்தை அவர் கோரியிருந்தார்.

குறித்த மனு மீதான வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அரசு தரப்பு சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி, "மகளின் திருமண ஏற்பாடு தொடர்பாக கூடுதல்ஆவணங்களைநளினி தாக்கல் செய்யவில்லை" என வாதிட்டார்.

ஆனால், அவரது வாதத்தினை ஏற்க மறுத்த நீதிபதிகள், நளினியை நேரில் முன்னிலைப்படுத்துவதில் என்ன சிக்கல்கள் காணப்படுகின்றதென கேள்வி எழுப்பினர்.

மேலும், நளினிக்கு நேரில் வாதிடுவதற்கு உரிமை உள்ளது. ஆகையால் அவருக்கு கூடுதல் பாதுகாப்பினை வழங்கி அதற்கான ஏற்பாடுகளை அரசு முன்னெடுக்க முடியுமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆகையால் இவ் விடயத்தில் உரிய பதிலை தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டுமென கூறி எதிர்வரும் 18ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(7)

## அரபு தேசமாக காத்தான்குடி

### ஹிஸ்புல்லா மீது குற்றச்சாட்டு குவிகிறது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை அரபு நாடாக மாற்றும் முயற்சியில் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா செயற்பட்டு வருவதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் ஹிஸ்புல்லாவின் செயற்பாடு குறித்து காத்தான்குடி பள்ளிவாசல்கள்,மற்றும் நிறுவனங்களின் சம்மேளனங்களின் பிரதிநிதியான அபூஸாலி உவைஸ் அதிருப்தி வெளியிட்டார்.

ஹிஸ்புல்லா தனது பதவிக் காலத்தில் காத்தான்குடியில் அரபு மயமாக்கலை மேற்கொண்டதாக சம்மேளனத்தின் பிரதிநிதி அபூஸாலி உவைஸ் தெரிவித்தார்.

விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜரான அபூஸாலி உவைஸ் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அரபு மயமாக்கல் முஸ்லிம்களின் கலாசாரம் அல்ல என்றும் அது சவூதி அரேபியாவில் ஏனைய நாடுகளின் பிரஜைகளை வெளியேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு கொள்கையாகும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் ஜெயம்பதி விக்கிரமரத்ன எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், முஸ்லிம்களின் மதவாத செயற்பாடுகளுக்கு அரபுமயமாக்கல் உதவவில்லை என்பதை நிராகரித்தார்.

புனித குர்ஆனை விளங்கிக் கொள்வதற்காகவே அரபு படிப்பிக்கப்படுகிறது என்றும் காத்தான் குடியில் அரபு எழுத்து சின்னங்களை ஏற்படுத்துவது அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். மேலும் ஹிஸ்புல்லாவின்காலத்திலேயே இந்த அரபு சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டன.

தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவன் சஹ்ரான் 5 ஆம் வகுப்பு வரையே படித்துள்ளான். காத்தான் குடியிலுள்ள ஒரு அரபு நிலையத்திலும் குருநாகலவில் உள்ள ஒரு மதரஸாவிலும் படித்த போதிலும் அவனால் மௌலவியாக வருவதற்கான படிப்பை பூர்த்தி செய்ய முடியவில்லை.

2006 ஆம் ஆண்டு காத்தான்குடியில் ஒரு அமைப்பை உருவாக்கிய சஹ்ரான் சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு தன்னை ஒரு மிதவாதியாகக்காட்டினான் ஆனால் பின்னர் அவனது செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்தது. இதுபற்றிப் பொலிஸாருக்கு தாம் அறிவித்ததுடன் எதிரான நடவடிக்கைகளை எடுத்ததாகவும் அபூஸாலி உவைஸ் மேலும் சாட்சியமளித்தார். (இ-7)

## சங்கா கைது

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினர் ஹீனடியான சங்கா கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

மினுவாங்கொட பிரதேசத்தில் களு அஜித் என்பவர் அண்மையில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்திலேயே ஹீனடியான சங்கா கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் வைத்து பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் இந்த சந்தேகநபர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். (இ-7)

## தூயஒளி வெற்றிக்கிண்ணம் ஊரெழு றோயல் அரையிறுதியில்



யாழ்ப்பாணம், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையில் மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் நினைவாக வருடாந்தம் நடத்தும் தூய ஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான இவ் வருடத்துக்கான போட்டிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

16 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் இடம்பெறுகின்றன.

மூன்றாவது அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனீஸ் அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. றோயல் அணி சார்பாக பிரசன்னா ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார். (க-26)

## பயற்றிக் சிறப்பான துடுப்பாட்டம் பற்றீசியன் அணி இலகு வெற்றி



யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அழைக்கப்பட்ட 8 அணிகளுக்கிடையில் விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபது-20 சுற்றுப் போட்டியானது ஞானம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

8 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில் அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற் சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெறுகின்றது.

பற்றீசியன் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற கே.சி.சி.சி. அணித்தலைவர் சாம்பவன் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். அதற்கிணங்க களமிறங்கிய பற்றீசியின் அணிக்கு, ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டம் பலமாக அமைந்தது. பயற்றிக் - நிசாந்த் ரியூடர் இணைந்து 78 ஓட்டங்களைப் பகிர்ந்தபோது, ரியூடல் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் இருந்த பயற்றிக் சிறப்பாக ஆடி அரைச்சதம் கடந்து 83 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டமிழந்தார். இதற்காக அவர் 55 பந்துகளையே எடுத்திருந்தார். இந்த இரண்டு விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டாலும் மத்திய வரிசையில் களமிறங்கிய றதீஸன் நம்பிக்கையளித்தார். றதீஸன் 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் கே.சி.சி.சி அணி சார்பாக, துஸியந்தன் 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், பிரதீஸ், கஜானன் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

183 என்ற கடின இலக்கை நோக்கி பதிலளித்தாடிய கே.சி.சி.சி.அணி, தொடக்கம் முதல் சீரான இடைவெளியில் விக்கெட் சரிவினை எதிர்கொண்டது. எந்த வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் பிரதாபன் 46, றொசான் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றீசியின் அணி சார்பாக, றதீஸன் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் பயற்றிக் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (க-26)



வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் யா/கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் ம.பிரித்தின் 12 வயதுப் பிரிவில் நீளம் பாய்தலில் இரண்டாம் இடத்தையும், உயரம் பாய்தலில் மூன்றாம் இடத்தையும் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## பெண்களுக்கிடையிலான பளுதூக்கல் போட்டி அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் சம்பியன்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவிகள் இரு தங்கப் பதக்கங்களை கைப்பற்றி சாதனையை பதிவு செய்தனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான பளு தூக்கும் போட்டி அண்மையில் கந்தர்மடம் வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளான ஆ.பிரகவி 76 கிலோ நிறைப் பிரிவில் 70 கிலோ தூக்கி தங்கப் பதக்கத்தையும், எஸ்.நிதுஷா 64 கிலோ நிறைப் பிரிவில் 79 கிலோ தூக்கி தங்கப் பதக்கத்தையும், அதே நிறைப் பிரிவில் பா.சாட்சாயினி 45 கிலோ தூக்கி நான்காம் இடத்தையும் சுவீகரித்துள்ளனர். (ஞ-60)

## பலம் மிக்க மைக்கலை வென்று இறுதிக்குத் தெரிவானது றேஞ்சஸ்



பலம் மிக்க மைக்கல், விபுலானந்தா அணிகளை வீழ்த்தி கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் கிரிக்கெட் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது றேஞ்சஸ் அணி.

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக விளையாட்டு விழாவின் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் யாவும் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதன் முதலாவது போட்டியில் வடமராட்சியில் பலம் பொருந்திய மாலுசந்தி மைக்கல் வி.க.எதிர் கொண்ட றேஞ்சஸ் அணி முதலாவதாக துடுப்பெடுத்தாடி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 47 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 41 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. 6 ஓட்டங்களினால் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது றேஞ்சஸ் அணி.

அரையிறுதி ஆட்டத்தில் கரவெட்டி விபுலானந்தா அணியை எதிர் கொண்ட றேஞ்சஸ் அணி முதலாவதாக துடுப்பெடுத்தாடி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 57 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விபுலானந்தா அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 42 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. 15 ஓட்டங்களால் வெற்றி பெற்று கரவெட்டி பிரதேச இளைஞர் கிரிக்கெட்டின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது றேஞ்சஸ் அணி. (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## கோவையைச்...

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், நட்சத்திர விடுதிகளில் தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதில் 250க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என இலங்கையை இந்தியா எச்சரித்தது. ஆனால் இலங்கை அலட்சியமாக இருந்ததால் இந்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கோவையில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ். ஆதரவாளர்களிடம் விசாரணையை மேற்கொண்டபோது கிடைத்த தகவலை கொண்டே இலங்கைக்கு இந்தியா பயங்கரவாத தாக்குதல் தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளது என தகவல் வெளியாகியது.

கேரளாவில் இருந்து வெளிநாட்டிற்கு சென்ற 20க்கும் மேற்பட்டோர் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தில் இணைந்துள்ளனர்.

இதுதொடர்பாக இந்திய தேசிய புலனாய்வு பிரிவு விசாரணையை மேற்கொண்டு வருகிறது. இதேபோன்று கோவைய்யைச் சேர்ந்தவர்களும் பயங்கரவாத இயக்கத்தால் ஈர்க்கப்பட்டதாக கைது நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையே உயிர்த்த ஞாயிறன்று தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிமின் பரப்புரையால் தமிழகம் மற்றும் கேரளாவை சேர்ந்த இளைஞர்கள் ஈர்க்கப்பட்டதும் தெரியவந்தது.

இந்நிலையில் கோவையில் 7 இடங்களில் இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர் அதிரடி சோதனையை மேற்கொண்டனர். அப்போது முக்கிய ஆவணங்கள் சிக்கியுள்ளன. சந்தேகத்திற்கு இடமானவர்களிடம் விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

6 பேருக்கு எதிராக தேசிய புலனாய்வு பிரிவினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர். கோவையில் சோதனை மேற்கொண்டபோது 14 மொபைல் போன்கள், 29 சிம் கார்ட்கள், 10 பென் டிரைவ்கள், 3 லப் டப்கள், 6 மெமரி கார்ட்கள், 4 ஹார்ட்டிஸ்க், துண்டறிக்கைகள் மற்றும் பிற ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில் கோவை மற்றும் கேரளாவில் ஐ.எஸ். ஆதரவாளர்களின் செயற்பாட்டை தேசிய புலனாய்வு பிரிவு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இலங்கைத் தாக்குதலை அடுத்து அதிரடி சோதனையில் 6 பேருக்கு இலங்கைத் தாக்குதலில் தொடர்பு உள்ளது தெரியவந்துள்ளது. இவர்களை தேசிய புலனாய்வு பிரிவு விரைவில் காவலில் எடுத்து விசாரிக்கும் எனத் தெரிகிறது. மேலும் சிலருக்கு அழைப்பாணை விடுக்கவும் திட்டமிட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. (ம-3)

## தெரிவுக்குழு...

குழு உறுப்பினர்கள் நேற்று சபாநாயகர் கருஜயசூரியவை சந்தித்து கலந்துரையாடினர். இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த சந்திப்பின்போது தெரிவுக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் தெரிவுக் குழு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்புகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் விசாரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (ம-3)

## அனைவருக்கும்...

சுவிட்சர்லாந்து, நோர்வே தூதரகங்கள் ஆகியவற்றுடனான உடன்படிக்கையின் பிரகாரம் இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பிரதமருடன் நேற்றைய தினம் இடம்பெற்ற சந்திப்பொன்றின்போது இது தொடர்பிலான தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டதாக ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## இலங்கைக்கு...

இச்சந்திப்பின்போது நாட்டின் பாதுகாப்பு விடயங்கள், பொருளாதாரம், நல்லிணக்கம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், "அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் பாதுகாப்பு நிலைமைகள், பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து நாட்டை பாதுகாக்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள், நாட்டின் தற்போதைய சமத்துவம் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அதேபோன்று அவற்றை செயற்படுத்துவதற்கு தேவையான முழு ஒத்துழைப்பையும் வழங்க அமெரிக்கா தயாராகவுள்ளதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

மேலும் இஸ்லாமிய அரச இயக்க பயங்கரவாதத்தை முழுமையாக ஒழிப்பதற்கான உதவிகளைப் பெற்றுக் கொடுக்க அமெரிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது. அமெரிக்காவின் தேவைக்காக அரசாங்கம் செயற்பட்டு வருவதாக எதிர்த்தரப்பினர் தொடர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

ஆயினும் நாட்டின் பாதுகாப்புக்கும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவும் இலங்கை அரசாங்கம் கேட்கும் உதவிகள் அனைத்தையும் வழங்க அமெரிக்க அரசாங்கம் தயாராகவே உள்ளது" என அவர் குறிப்பிட்டார். (ம-3)

## மாற்றான் பிள்...

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இலவச தொழிற்பயிற்சி நிறுவனம் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"முப்பது வருடமாக நாட்டில் இடம்பெற்ற யுத்தமானது சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மிகப்பெரிய தாக்கத்தை செலுத்தியுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் நவீன வசதி வாய்ப்புக்களை அரசாங்கத்தின் ஊடாகவும் வெளிநாடுகளின் ஊடாகவும் பெற்று பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ளனர்.

ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் சாதாரண மக்கள் எதுவித உதவிகளோ, அனுசரணைகளோ அற்ற நிலையில் மூன்று வேளை உணவுக்குக்கூட சிரமப்படுவதை நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கின்றோம். இவ்வாறான விடயங்கள் குறித்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் பல முறை பேசி வந்திருக்கிறேன். ஆனால் வடக்கு கிழக்கு பிரதேசங்களை மாற்றாந்தாய் பிள்ளைகளைப் போன்றே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் நடத்தியுள்ளன.

இவ்வாறான நிலையில் சுயமாக முன்னேறும் வகையில் எடுத்த அத்தனை முயற்சிகளையும் அரசாங்கம் தடுத்துநிறுத்தவும் பின்னிற்கவில்லை" என்று தெரிவித்தார். (ம-3)

# போதைப்பொருளை பிடிக்கச் சென்ற சுகாதாரத் துறையினருக்கு உயிர் அச்சுறுத்தல்

## யாழ்.மாணவர்களுக்கு விற்க தயாராக வைக்கப்பட்டிருந்தது

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம், நாவந்துறைப் பகுதியில் உள்ள வீடொன்றில் மாவா உள்ளிட்ட போதைப்பொருட்கள் விற்பனைக்கு வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அந்த வீட்டை சோதனையிட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுமார் 3 லட்சம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருள் பாக்குப் பொதிகளை மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"நாவந்துறைப் பகுதியில் உள்ள முஸ்லிம் குடும்பம் வசிக்கும் வீடொன்றில் மாவா உள்ளிட்ட போதைப்பொருள் பாக்கு பாடசாலை மாணவர்களுக்கு விற்கும் நோக்குடன் பொதியிடப்பட்டதாகத் தகவல் கிடைத்தது.

அந்த வீட்டில் வசிப்பவருக்கு எதிராக ஏற்கெனவே நீதிமன்றில் இதே குற்றச்சாட்டுடன் வழக்கும் உள்ளது. யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள முன்னணி பாடசாலை மாணவர்களுக்கு போதை கலந்த பாக்கு விற்பனை செய்யப்படுவதும் அறியக் கிடைத்தது.

அதனால் யாழ்ப்பாணம் மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தகவல் வழங்கி அவர்கள் ஊடாக போதை கலந்த பாக்கு சரைகளை மீட்க நடவடிக்கை எடுத்தோம். அந்த வீட்டை நேற்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனைக்குட்படுத்தினர்.

வீட்டில் இருந்த மூவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை பணி செய்ய விடாமல் தடுத்தனர். ஒரு கட்டத்தில் அவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைக் "கொலை செய்வோம்" என்று உயிர் அச்சுறுத்தல் விடுத்தனர்.

எனினும் அந்த வீட்டிலிருந்து சுமார் 3 லட்சம் ரூபாய் பெறுமதியான போதை பாக்கு கைப்பற்றப்பட்டன. அவை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நாளை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு சான்றுப்பொருள் நீதிமன்றில் ஒப்படைக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

# அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துவது ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பொறுப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)

அமைச்சரவைக் கூட்டங்களை நடத்துவது ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பொறுப்பு என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நடத்தப் படாதது குறித்து செய்தியாளர் ஒருவர் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் முதல் முறையாக ஜனாதிபதியும், பிரதமரும் இழுபறியில் ஈடுபட்டுள்ளனர். ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமான பாராளுமன்ற தெரிவுக்குழுவை ஜனாதிபதி எதிர்க்கின்றார்.

புலனாய்வு அதிகாரிகளின் தகவல்கள் வெளியிடப்படுவதால் அழிவு ஏற்படும். மில்லேனியம் சிட்டி பிரச்சினை காரணமாக புலனாய்வு அதிகாரிகள் கொலை செய்யப்பட்டனர்.

அதேவேளை முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியதை தாம் எதிர்ப்பதாக, அவர்கள் தன்னை சந்தித்தபோது நேரடியாக கூறியதாகவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## அரசுக்கு எதிராக..

நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் கிடைத்திருந்தும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்ட அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருப்பது ஜனநாயகத்திற்கு பொருத்தமற்றது எனத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தது.

கொழும்பு டெக்னிகல் சந்தியில் மாலை 3 மணியளவில் ஆரம்பமான ஆர்ப்பாட்டம் பேரணியாக கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடைந்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்ற அரசாங்கத்திற்கெதிரான இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பாராளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்னாயக்க, விஜித ஹேரத், சுனில் ஹந்துனெத்தி, ஜயந்த ஜயதிஸ்ஸ மற்றும் லால் காந்த ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுமார் 500 க்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். இதன் காரணமாக மருதானை மற்றும் புறக்கோட்டை உள்ளிட்ட இடங்களில் சுமார் ஒரு மணித்தியாலயம் கடும் வாகன நெரிசல் காணப்பட்டது.

புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு பேரணி நிறைவடைந்ததோடு, கட்சி தலைவர் அநுரகுமார திஸாநாயகக உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களின் உரையுடன் போராட்டம் நிறைவடைந்தது. (ம-3)












## முச்சக்கரவண்டி...

இவ் விபத்து சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியாவில் இருந்து பூவரசங்குளம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி கற்பக புரம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது அதே திசையில் பயணித்த ஹயஸ் ரக வாக னம் முச்சக்கரவண்டியை முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் முச்சக்கரவண்டியை செலுத்தி சென்ற வவுனியா பத்தினியார் மகிழங்குளத்தைச் சேர்ந்த 25 வயதான சிவபெருமாள் கஜேந்திரன் என்ற இளை ஞன் மரணமடைந்துள்ளார்.

ஹயஸ் ரக வாகனத்தையும் முச்சக்கர வண்டியையும் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றதுடன் ஹயஸ் வாகன சாரதியையும் கைது செய்து விசா ரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

மரணமடைந்தவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக் காக வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பூவரசங் குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம-250)

## ஹிஸ்புல்லாஹ்...

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அழைக்கப் பட்டுள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு மீண்டும் இன்று மாலை 3.30 மணியளவில் கூட வுள்ள நிலையில், அவர் இதன்போது சாட்சி வழங்கவுள்ளார்.

அவருக்கு மேலதிகமாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கோன், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதியமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் முன் னாள் செயலாளர் பத்மசிறி ஜயமன்னவும் சாட்சி வழங்குவதற்காக அழைக்கப்பட் டுள்ளனர். (ம-3)

## தொடர்ந்து 3...

பாராளுமன்ற தெரிவுக் குழு தொடர்ந்து 3 மாதங்களுக்கு தடையின்றி இயங்கும் என அதன் உறுப்பினர்களுள் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த தெரிவுக்குழு சம்பந்தமாக ஜனாதி பதி அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இதனை ரத்து செய்யாவிட்டால் அமைச் சரவைக் கூட்டத்தை நடத்தப் போவதில்லை என ஜனாதிபதி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட அமைச்சரவை கூட்டத் தில் வைத்து கூறியதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

இந்த நிலையில் இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரனை தொடர்பு கொண்டு வினவியபோது, குறித்த தெரிவுகுழுவானது 3 மாத காலம் குறிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட நிலையில் அந்த காலப்பகுதி வரையில் தொடர்ந்தும் இயங்கும் என கூறினார்.

அதேநேரம் பாராளுமன்றமே இந்த தெரிவுக்குழுவை கலைத்தாலே தவிர வேறு எவரும் இதனை கலைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பிரதமர் தலைமையில் அமைச்சரவை கூட்டத்தை நடத்துவதற்கு அரசியல் யாப்பில் இடமிருப்பதாகவும் எம்.ஏ. சுமந்திரன் கூறினார். (ம-3)

## கொக்குவில்...

நடத்தியுள்ளது.

தாக்குதலில் தலையில் படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள் ளார்.

இந்தச் சம்பவம் கொக்குவில் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்றது.

கொக்குவில் சந்திக்கு அண்மையாக உள்ள முச்சக்கரவண்டித் திருத்தகத்தில் கொக்குவில் ரயில் நிலைய பொறுப்பதிகாரி நின்றுள்ளார். அங்கு மோட்டார் சைக்கிள் களில் வந்த கும்பல், அவரைத் தாக்கி யுள்ளது. தலையில் படுகாயமடைந்த அவரை அங்கி ருந்தவர்கள் உட னடியாக யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் தொடர பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படு கின்றன. சந்தேக நபர்கள் விரைவில் கைது செய்யப்படு வார்கள்" என்று யாழ் ப்பாணம் பொலி ஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சம்பவத்தை அடுத்து கொக்குவில் சந் தியை அண்மித்த பகுதியில் பொலிஸா ரும் இராணுவத் தினரும் வரவழைக் கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ம-3)

## நல்ல...

துரிதமாக நல்ல பதிலை வெளியிட வுள்ளதாக ஸ்ரீல ங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவர், முன்னாள் அமைச் சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பதவி களில் இருந்து வில கிய முன்னாள் முஸ் லிம் அமைச்சர்கள் நேற்று முன்தினம் மஹாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ரவூப் ஹக்கீம் இத னைக் குறிப்பிட்டுள் ளார். (ம-3)


### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(9127)



### குவைத் வேலைவாய்ப்பு

முன்பள்ளி ஆசிரியர் உதவியாளர் (பெண்கள்)
சம்பளம் ரூ.87,500/-
தங்குமிடம், மருத்துவம், காப்புறுதி, விமானச்சீட்டுக்கள் இலவசம்
எமரல்ட் ஐல் License No. 2265
0777 324 004 / 077 00 38 215 / 021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம் (ஷாரா புடவையகம், The Lovers/Tean Girlsக்கு அருகே)
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk


## பயங்கரவாதி...

நான் கைது செய்யப்பட்டேன். அது மட்டு மல்ல, அவர்கள் குறித்து வாய் திறக்க வேண்டாம் என வலியுறுத்தினர். 500 மில்லியன் ரூபாய் பணம் தருவதாக பேரம் பேசினார் என பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முன்னிலையில் நேற்று முன் தினம் போட்டுடைத்தார் முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சிய மளித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய ஆட்சியாளர் காலத்தில் காத்தான்குடியில் ஐ.எஸ் அமைப்பு பலமாக செயற்படுகிறது என கோத்தபாய ராஜபக்ஷ விற்கும், ஏனைய அதிகாரிகளிற்கும் தெரி வித்தேன்.

ஆனால் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும், தௌஹீத் ஜமாஅத்திற்குமிடையில் நெருங் கிய தொடர்பிருந்தது. தௌஹீத்தை பற்றி பேசியதால்தான் நான் கைது செய்யப்பட் டேன். அது மட்டுமல்ல அவர்கள் குறித்து வாய் திறக்க வேண்டாமென எனக்கு அறி வுறுத்தினர். 500 மில்லியன் பணம் தருவ தாக பேரம் பேசினர். தேர்தலில் களமிறங்கு வதாக இருந்தால் அதில் 200 மில்லியனை செலவழிக்கவும் ஆலோசனை சொன்னார் கள்.

கடந்த காலங் களில் காத்தான் குடியில் நடந்த பல அசம்பாவிதங்களிற்கு சஹ்ரான் காரண மாக இருந்தார். இது குறித்து முஸ்லிம் மக்கள் முறைப்பாடு கள் செய்தபோதும், பொலிஸார் சஹ்ரான் பக்கமே நின்றனர். சஹ்ரானை கைது செய்ய கிழக்கில் ஆர்ப்பாட்டம் கூட நடத்தினார்கள். தௌ ஹீத்தும், பொலிஸா ரும் ஒன்றாகவே செயற்பட்டனர் என் றார். (ம-3)

## தெரிவு...

புத்தகத்தில் சேர்க் கப்பட்டுள்ளதால் தெரிவுக்குழு நட வடிக்கைகளை இடைநிறுத்த முடி யாது. குற்றம் சாட்டப் பட்ட இறுதி நபர் சாட்சியமளிக்கும் வரையும் தெரிவுக் குழு நடவடிக்கையை தொடர்வது என தீர் மானிக்கப்பட்டுள் ளது.

தெரிவுக்குழுவின் பதில் தவிசாளர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண தலைமையிலான தெரிவுக்

▶23


### சிங்கள வகுப்புகள்

அடிப்படை வகுப்பு தொடக்கம் க.பொ.த சாதாரணதர இரண்டாம் மொழி சிங்கள பாட வகுப்புகள் நடைபெறும்.
அரச ஊழியர்களுக்கான பரீட்சை வகுப்புகளும் நடைபெறும்.
நிலையம் - யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம்
தொடர்புகளுக்கு (9119)
077 086 4649



### விற்பனைக்கு உண்டு

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் உள்ள 50 அடி நீளமான கொட்டகை (மரம், தகரம், சீற்)
வளைவு தகர கொட்டகை 25 அடி
40 அடி நீளமான தகரக் கொட்டகை
கண்ணாடி சோக்கேஸ்
இறாக்கைத் தட்டுகள்
அனைத்தும் உடன் விற்பனைக்கு. (9134)
தொடர்புகளுக்கு: 075 567 8225, 077 475 8690



### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-6532)



### புதிய ஆங்கிலப் பாடநெறி

சனி, ஞாயிறு தினங்களில்
DIPLOMA IN ENGLISH
(06 மாதங்கள்)
சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.00 - 10.30 வரை
ஆரம்பம்: 15.06.2019
E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
Tel: 0212217106 / 0773400418 / 0770615242 / 0774924166
web: www.ecitycollege.lk



### வேலைவாய்ப்பு

முழுநேர வேலைவாய்ப்புக்கு துடிப்பும், ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். தங்களுக்கு O/L தகைமை இருப்பின் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.
❖ வயதெல்லை: 18 -35
❖ சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்
❖ அனுபவம் அவசியமில்லை
❖ உணவு, தங்குமிட வசதிகள் உண்டு
தொடர்புகளுக்கு: 077 123 7692 (9135)



### நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
அருள் இல.1. பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576



### வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இப்பொழுது!!!
மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 350/=
France, Germany, Italy, Denmark - 500/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna. (C-6656) 0777 554 528



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
### ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 672 6623



### FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்ச்
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 22.06.2019 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம்: 24.06.19 3.30 pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.



### பொருளியல் கருத்தரங்கு

க.பொ.த. உயர்தரம் - 2019
ஆரம்பம்: 15.06.2019 சனிக்கிழமை 2.00 PM
Resource Person
S.JEYAKUMAR
{B.A (Hons) Econ Spl, MA in Econ (Pera) PGDE}
- தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை.
- கற்றல் கையேடுகள் வழங்கப்படும்.
- புள்ளித் திட்டத்துடன் கூடிய விளக்கம்
- வெளி மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
- ஆசிரியரிடம் கற்கும் மாணவர்கள் தமது அனுமதி அட்டையை எடுத்து வரவும்.

இடம்: Science Hall Jaffna. (பெருமாள் கோவில் அருகில்)
*முற்பதிவுகளை DCM - Jaffna, NEC - Jaffna ஆகிய இடங்களில் பதிவு செய்ய முடியும்.
தொடர்புகளுக்கு: 077 723 8597 (9122)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.